RESPECT

WOMEN

# RESPECT கட்டமைப்பு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (M&E) வழிகாட்டி

UN WOMEN

World Health Organization

# அறிமுகம்

இந்தக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) வழிகாட்டியானது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான (VAW) நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கான மூலோபாயங்கள் குறித்த பிரதானமான வழிகாட்டுதலை வழங்குகிறது. இந்த வழிகாட்டியானது RESPECT கட்டமைப்பை அமுல்படுத்துவதை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டதுடன் VAW தடுப்புக்கான M&E கட்டமைப்பை எவ்வாறு உருவாக்குவது மற்றும் அமுல்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது, ஏழு RESPECT மூலோபாயங்கள் ஒவ்வொன்றிற்குமான M&E குறிகாட்டிகள், பாதுகாப்பான மற்றும் நெறிமுறையான M&E அமைப்புகள் மற்றும் செயன்முறைகளை எவ்வாறு வடிவமைத்து அமுல்படுத்துவது என்பது பற்றிய ஆலோசனை ஆகியவற்றை வழங்குகின்றது. இது முழுமையாக விரிவானதாக இருக்க வேண்டும் என்று கருதப்படவில்லை, மாறாக RESPECT மூலோபாய ஆவணங்களுடன் பயன்படுத்தப்படும் சுருக்கத்தையும், தேவைக்கேற்ப மேலும் பயனுள்ள ஆதாரங்களையும் இணைக்கிறது.

## VAW தடுப்புப் பணிகளை கண்காணித்து மதிப்பீடு செய்வது ஏன் முக்கியமானது?[1]

**பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்கும் என்ன வேலை செய்கிறது என்பது மீதான வலுவான உலகளாவிய சான்று அடிப்படையை உருவாக்குவதற்கு:** சான்று அடிப்படைகள் வளர்ச்சியடைந்தாலும், எந்த மூலோபாயங்கள் மற்றும் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமானவை, எந்த சூழலில், எந்த சனத்தொகைக் குழுக்கள் என்பதைப் புரிந்துகொள்வதில் தொடர்ந்தும் பல இடைவெளிகள் உள்ளன. நெருங்கிய பங்காளர் வன்முறை (IPV) மற்றும் பங்காளரல்லாதவரின் பாலியல் வன்முறை (NPSV) போன்ற VAW இன் சில வடிவங்களுக்கு சான்றுகள் வலுவானதுடன், மற்றையவற்றிற்கு அவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் செயற்திறனைக் கண்காணிப்பதற்கு:** நிகழ்ச்சித் திட்டம் அதனுடைய நோக்காக கொண்ட முடிவுகளை அடைவதற்கான பாதையில் உள்ளதா அல்லது சரிப்படுத்தல்கள் தேவையா என்பதை அடையாளம் காண்பதற்கு M&E உதவும். இதனால் ஒரு நடவடிக்கையின் வெற்றியை மதிப்பிடவும், நடவடிக்கைகள் செயற்படுகின்றனவா, யாருக்காக, ஏன் என்பதை அடையாளம் காணவும் முடியும்.

**தாக்கத்தை கொண்டு வரக்கூடிய மிகவும் வினைத்திறனான மற்றும் விளைதிறனான வன்முறை தடுப்பு நடவடிக்கைகளை அடையாளம் காண உதவுவதற்கு:** வன்முறையைத் தடுக்க என்ன வேலை செய்கிறது என்பதற்கான சான்றுகள் வளர்ச்சியடைந்தாலும், நடவடிக்கையின் தாக்கத்தை குறைக்காமல் மிகவும் வினைத்திறனான வழிகளில் வன்முறையை பெரியளவில் எவ்வாறு தடுப்பது என்பது பற்றி குறைவாகவே அறியப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பயனாளிகளைப் பாதிக்கக்கூடிய அபாயங்களைக் கண்டறிந்து நிர்வகிப்பதற்கு:** VAW நிகழ்ச்சித் திட்டங்கள் பால்நிலை மற்றும் அதிகார சமத்துவமின்மைகளை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதால், சமூக உறுப்பினர்கள், ஆண்கள் மற்றும் அதிகாரத்தை கொண்டிருப்பவர்களிடமிருந்து எதிர்ப்பு, கட்டுப்படுத்தும் நடத்தைகள் மற்றும்/அல்லது மேலதிகமான வன்முறை போன்ற எதிர்மறையான பதில்கள் மற்றும் பின்னடைவுக்கு வழிவகுக்கும். இந்த அபாயங்களைக் கண்காணிக்கவும், தணிப்பு உத்திகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் M&E அமைப்பு முக்கியமானதாகும்.

**உலகளவில் VAW ஐத் தடுப்பதில் தொடர்ச்சியான அளவீடு மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதை உறுதி செய்வதற்காக:** VAW ஐத் தடுப்பதற்கான முன்னேற்றத்தை அளவிடுவதிலுள்ள ஒரு முக்கியமான சவால் குறிகாட்டிகள் மற்றும் அளவீட்டு வடிவங்களில் உள்ள பரந்தளவான மாறுபாடாகும், இது ஒப்பிட முடியாத தரவுகளுக்கு வழிவகுக்கிறது. IPV மற்றும் NPSV போன்ற சில வகையான VAW க்கான தாக்க-நிலை குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகள் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தாலும், மற்றைய வகை வன்முறைகளுக்கான மற்றும் சமூக விழுமியங்களில் மாற்றங்கள் போன்ற விளைவுகளுக்கான குறிகாட்டிகள் மற்றும் நடவடிக்கைகளிலும் பெரியளவான மாறுபாடுகள் உள்ளன. தாக்கங்கள் மற்றும் விளைவுகளுக்கு ஒப்பிடக்கூடிய உலகளாவிய குறிகாட்டிகளின் தொகுப்பை உருவாக்குவதும் பயன்படுத்துவதும் முக்கியமானதாகும்.

### பெட்டி 1: வரையறைகள்

**கண்காணிப்பு:** என்பது ஒரு நிகழ்ச்சித் திட்டம் அதன் நோக்கங்களை அடைவதற்கான முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் முகாமைத்துவ தீர்மானங்களை வழிநடத்துவதற்கும் தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முறையான செயன்முறையாகும். கண்காணிப்பு பொதுவாக எப்போது, எங்கே செயற்பாடுகள் நிகழ்கின்றன, யார் அவற்றை வழங்குகிறார்கள் மற்றும் எத்தனை நபர்கள் அல்லது நிறுவனங்களை அவை சென்றடைகின்றன போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்துகிறது.

**மதிப்பீடு:** ஒரு செயற்பாடு, செயற்திட்டம், நிகழ்ச்சித் திட்டம், மூலோபாயம், கொள்கை, விடயம், கருப்பொருள், துறை, செயற்பாட்டு பகுதி அல்லது நிறுவனங்களின் செயற்திறன் ஆகியவற்றின் முறையான மதிப்பீடாகும். மதிப்பீடானது அடைவுகள் அல்லது அடைவுகளில் பற்றாக்குறையைப் புரிந்து கொள்வதற்காக, எதிர்பார்க்கப்பட்ட மற்றும் அடையப்பட்ட அடைவுகள், முடிவுச் சங்கிலியை ஆய்வு செய்தல் (உள்ளீடுகள், செயற்பாடுகள், வெளியீடுகள், விளைவுகள் மற்றும் தாக்கங்கள்), செயன்முறைகள், சூழ்நிலைக் காரணிகள் மற்றும் காரணங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

ஆதாரம்: Programming Essentials, Monitoring & Evaluation.
UNWOMEN Virtual Knowledge Centre to End Violence against Women and Girls

## VAW தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் M&E க்கான வழிகாட்டுதல் கொள்கைகள்

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பின் வடிவமைப்பில் **உள்ளூர் பங்காளர்கள் மற்றும் பங்குதாரர்களை ஈடுபடுத்துங்கள்:** அவர்கள் சூழலுக்கு பொருத்தமானவர்கள் என்பதுடன் சான்று தேவைகளுக்கு பதிலளிப்பதும் முக்கியமானது.

**M&E அணுகுமுறைகள் தப்பிப் பிழைப்பவர்களை மையமாகக் கொண்டவை என்பதை உறுதிப்படுத்துங்கள்,** அதாவது அவர்கள் சம்பந்தப்பட்ட பெண்களின் தனியுரிமை, ரகசியத்தன்மை மற்றும் உடல் மற்றும் உணர்ச்சிப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

**பால்நிலைக்கு பதிலளிக்கும் அணுகுமுறையை பின்பற்றுங்கள்:** M&E பால்நிலை மற்றும் அதிகார உறவுகளின் பகுப்பாய்வை ஒருங்கிணைப்பதுடன், உள்ளடங்கலான, வலுவூட்டும் முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

நிதி வழங்குபவர்கள் மற்றும் திட்ட பங்கேற்பாளர்களுக்கு **கற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்துவதை உறுதிசெய்யவும்.** நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு, பின்பற்றுகை, தீர்மானமெடுத்தல், முன்னேற்றம் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகியவற்றை மதிப்பிடுதல் மற்றும் இணைந்துள்ள பங்கேற்பாளர்கள் மற்றும் சமூகங்களுடன் முடிவுகளைப் பகிர்ந்துகொள்வதற்கான பின்னூட்ட வழிமுறைகள் இருப்பதை உறுதிசெய்வது போன்றவற்றுக்குப் பயனுள்ள தரவுகளைச் சேகரிப்பது இதற்குத் தேவைப்படுகிறது.

**முனைப்பான பங்கேற்பை ஊக்குவிக்கும் முறைமைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தவும்:** முறைமைகள் மற்றும் கருவிகள், சமூக-கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மொழி மற்றும் கல்வியறிவு நிலைகள் மற்றும் பங்கேற்பாளர்களின் ஏதேனும் இயலாமைகளை கருதுவது உட்பட முனைப்பான பங்கேற்பை அதிகரிப்பதுடன் உள்ளூர் சூழலுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

ஆரம்பத்திலிருந்தே நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு உயர் தரமானதாகவும் பொருத்தமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அணுகுமுறைகள் கட்டமைக்கப்படும் வகையிலும் **போதுமான பாதீட்டை உறுதி செய்யவும்.**

## VAW தடுப்புக்கான M&E கட்டமைப்பை விருத்தி செய்தல்

M&E கட்டமைப்பை உருவாக்கி அமுல்படுத்துவதில் வலுவான M&E அமைப்பின் அடிப்படையாக இருக்கின்ற பல பிரதானமான படிமுறைகள் உள்ளன, இந்த படிமுறைகள் மேலதிக வழிகாட்டுதலுக்கு ஆலோசனை பெறக்கூடிய பல்வேறு VAW தடுப்பு மற்றும் M&E சான்றுகளில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன.[2]

### 1. உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி/சூழ்நிலை பகுப்பாய்வு

வன்முறைத் தடுப்புத் நடவடிக்கையை உருவாக்குவதற்கு முன்னர் அல்லது உருவாக்கும் போது, உருவாக்கத்திற்கான ஆராய்ச்சியை மேற்கொள்வது இன்றியமையாதது, இது சில சமயங்களில் சூழ்நிலை பகுப்பாய்வு என குறிப்பிடப்படுகிறது, இது நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் பின்பற்றுகையைத் தெரிவிக்கும். நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும் குறிப்பிட்ட சூழல்களில் பின்வருவனவற்றை உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி ஆராய்கிறது:

- வன்முறையின் வகைகள் மற்றும் நிலைகள் மற்றும் இயக்கிகளுக்கான காரணிகளின் உள்ளூர் மனப்பாங்குகள் உட்பட VAW இன் குறிப்பிட்ட இயக்கிகள்,
- VAW இன் பல்வேறு வடிவங்களை ஆதரிக்கும் மற்றும் செயற்படுத்தும் குறிப்பிட்ட நம்பிக்கைகள் மற்றும் சமூக விழுமியங்கள்
- நலிவடைந்த குழுக்கள் உட்பட பல்வேறு குடித்தொகை குழுக்களின் தனித்துவமான தேவைகள் மற்றும் அனுபவங்கள்
- தற்போதுள்ள நடவடிக்கைகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அவற்றின் தாக்கம் பற்றிய சான்றுகள்
- தப்பிப் பிழைத்தவர்களுக்கான ஆதரவு சேவைகள், அவர்களின் அணுகல் மற்றும் திறன் மற்றும்
- முறைசார் மற்றும் முறைசாரா தரப்பினர், அவர்களின் திறன்கள், அறிவு, அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகள் உட்பட முக்கிய பங்குதாரர்கள்.

தேசிய தடுப்பு உத்திகளை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த பணிப்புத்தகத்தின் படிமுறை ஒன்று, தேசிய/துணை-தேசிய மட்டத்தில் சூழ்நிலைப் பகுப்பாய்வை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றிய விரிவான வழிகாட்டுதலை வழங்குகிறது.

### 2. மாற்றத்திற்கான கோட்பாட்டை உருவாக்குதல்

M&E கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமான படிமுறை, நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாற்றக் கோட்பாட்டை (ToC) வடிவமைத்தலாகும், இது பின்வருவனவற்றை வரைபாக்குகின்றது:

- VAW அல்லது VAW ஆபத்து காரணிகள் தொடர்பான அறிவு, மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளில் மாற்றத்திற்காக எதிர்பார்க்கப்படும் பாதைகள்
- எவ்வாறு இந்த பாதைகள் விரும்பிய தாக்கத்திற்கு வழிவகுக்கும் மற்றும்
- மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படும் பாதைகள் மற்றும் செயன்முறைகளை விளக்கும் அனுமானங்கள்.

M&E இற்கான பிற வகையான கட்டமைப்புகளில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் உள்ளீடுகள், செயற்பாடுகள், வெளியீடுகள், விளைவுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் தாக்கங்களை மிகவும் நேரியல் முறையில் வரைபடமாக்குகிற முடிவுகள் கட்டமைப்புகள் மற்றும் தர்க்க கட்டமைப்புகள் ஆகியவை

உள்ளடங்கும். நேரிய M&E கட்டமைப்புகள் பொதுவாக VAW தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு போதுமானதாக இல்லை, ஏனெனில் அவை மாற்றத்திற்கான பல்வேறு பாதைகளின் சிக்கல்களை மற்றும் இணைப்புகளை வரைபடமாக்கவில்லை. ஒவ்வொரு RESPECT மூலோபாய சுருக்கத்திலும் நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கங்களில் வழங்கப்படும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் உதாரணங்களுக்கான ToC உடன் ஒரு இலகுவான ToC வழங்கப்படுகிறது.

## 3. M&E கேள்விகளை வடிவமைத்தல்

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கேள்விகள் VAW தடுப்புத் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதுடன் நல்ல மதிப்பீட்டு வடிவமைப்பின் அடித்தளமாக இருக்க வேண்டும். எதிர்பார்க்கப்படும் உடனடி மற்றும் நீண்ட கால விளைவுகள் அடையப்பட்டனவா இல்லையா (என்ன மாற்றங்கள் நிகழ்கின்றன) என்பது தொடர்பான கேள்விகளைக் கேட்பதற்கு மேலதிகமாக, மாற்றங்கள் எப்படி, ஏன் நடக்கின்றன அல்லது நடக்கவில்லை என்பதையும் ஆராய வேண்டும். நிகழ்ச்சித் திட்ட அமுல்படுத்தல், பாடங்கள், வெற்றிகள் மற்றும் சவால்கள் மற்றும் அமுல்படுத்தல் நெறிமுறைகள் பின்பற்றப்படுகிறதா இல்லையா என்பது தொடர்பான கேள்விகளும் இருக்க வேண்டும். இது பெரும்பாலும் தாக்கத்திற்கான மதிப்பீடு என்பதிலும் பார்க்க செயன்முறை மதிப்பீடு என்று குறிப்பிடப்படுகிறது.

மாற்றத்திற்கான கோட்பாடு அல்லது தர்க்கரீதியான கட்டமைப்புக்கு அப்பாற்பட்ட கேள்விகளைக் கேட்பதும் நிகழ்ச்சித் திட்டத்தின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான எதிர்பாராத விளைவுகளையும் மற்றும் இடர் முகாமைத்துவ உத்திகள் செயற்படுகின்றனவா என்பதை வெளிப்படுத்துவதும் முக்கியமானதாகும். இறுதியாக, OECD DAC இனுடைய மதிப்பீட்டு அளவுகோல்களுக்கு இணங்க வேண்டும் (பெட்டி 2 ஐப் பார்க்கவும்), நேர்மறையான தாக்கம் காணப்பட்டால், இத்திட்டம் பயனடைய எதிர்பார்க்கும் நபர்களுக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் பொருத்தம் மற்றும், எவ்வாறு நடவடிக்கையின் பலன்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறைக்கு அப்பாலும் நிலைத்திருக்க முடியும் என்பதைப் பற்றிய கேள்விகளைக் கேட்பது பயனுள்ளதாகும்.

## 4. மதிப்பீட்டு அணுகுமுறையை வடிவமைத்தல்

நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவுகள் மற்றும் தாக்கங்களை அளவிடுவதற்கும் விளக்குவதற்கும் மூன்று பிரதான வகையான மதிப்பீட்டு வடிவமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன:

1. **பரிசோதனை வடிவமைப்பு:** இந்த வடிவமைப்பு பெரும்பாலும் எழுந்தமானமான கட்டுப்பாட்டு சோதனை (RCT) என குறிப்பிடப்படுகிறதுடன், அங்கு தனிநபர்கள் அல்லது தொகுதிகள் (உதா. சமூகங்கள் அல்லது பாடசாலைகள்) நடவடிக்கையைப் பெறுவதற்காக (சிகிச்சை அல்லது நடவடிக்கை குழு) அல்லது பெறாமைக்காக (கட்டுப்பாட்டு குழு) எழுந்தமானமாக ஒதுக்கப்படுகின்றன. இந்த மதிப்பீட்டு வடிவமைப்பு மிகவும் வலுவானதாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இது நேரடியாக நடவடிக்கையுடன் மற்றும் நடவடிக்கை இல்லாமல் நிலைமையை ஒப்பிடுவதால், நடவடிக்கையின் மாற்றங்களைக் கூறலாம். இது மிகவும் நெகிழ்வுத் தன்மையற்றதுடன் செலவு உயர்ந்ததாக இருக்கலாம். நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து நேரடியாகப் பயனடையவில்லை எனின், மதிப்பீடுகளில் கட்டுப்பாட்டு குழுக்களுக்கு பெண்களை எழுந்தமானமாக நியமிப்பது எந்தளவு நியாயமானது என்பது பற்றிய விவாதங்கள் உள்ளன. எனவே தாக்க மதிப்பீடுகள் நேர்மறையான விளைவுகளைக் கண்டறிந்தால், மதிப்பீடு முடிவடைந்த பிறகு, கட்டுப்பாட்டுக் குழுக்களுக்கு நடவடிக்கையை அமுல்படுத்த திட்டமிடுவதே சிறந்த நடைமுறையாகும்.

> **பெட்டி 2: மதிப்பீட்டிற்கான நியதிகள்**
>
> **தொடர்பு:** இலக்குக் குழு, பெறுநர் மற்றும் நன்கொடையாளர் ஆகியோரின் முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு எந்த அளவிற்கு உதவி நடவடிக்கை பொருத்தமானது.
>
> **வினைத்திறன்:** ஓர் உதவிச் செயற்பாடு அதன் குறிக்கோள்களை எந்த அளவிற்கு அடைகிறது என்பதற்கான அளவீடு.
>
> **விளைதிறன்:** உள்ளீடுகள் சார்பாக அளவறி ரீதியாக மற்றும் பண்பறி ரீதியாக வெளியீடுகளை அளவிடுகிறது. விரும்பிய முடிவுகளை அடைய இதுவே குறைந்த செலவில் உள்ள வழியா?
>
> **தாக்கம்:** அபிவிருத்தி நடவடிக்கை ஒன்றின் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, திட்டமிடப்பட்ட அல்லது திட்டமிடப்படாத நேர்மறையான மற்றும் எதிர்மறையான மாற்றங்கள்.
>
> **நிலைத்தன்மை:** நன்கொடையாளரின் நிதியளிப்பு முடிவடைந்த பின்னரும் செயற்பாட்டின் பலன்கள் தொடருமா என்பதை அளவிடுதல்.
>
> ஆதாரம்: OECD (2010) Glossary of Key Terms in Evaluation and Results-Based Management

2. **ஒப்பிட்டுக் குழுவுடனான பகுதியளவிலான கட்டுப்பாட்டுப் பரிசோதனை வடிவமைப்பு:** ஒரு குழு நடவடிக்கையைப் (சிகிச்சை அல்லது நடவடிக்கைக் குழு) பெறும் அதே நேரத்தில் மற்றொரு குழு (ஒப்பீட்டுக் குழு) பெற்றுக்கொள்ளாத பரிசோதனை வடிவமைப்பைப் போன்றே இந்த வடிவமைப்பும் உள்ளது, இருப்பினும், பொதுவாக ஒரு குழுவுக்கு அல்லது மற்றொன்றுக்கு எழுந்தமானமாக வழங்கப்பட்ட செயற்பாடு எதுவும் இல்லையென்பதுடன், இது மாதிரியில் சார்புகளை அறிமுகப்படுத்தலாம். இருந்த போதிலும், நடவடிக்கைக் குழுவிற்கு முடிந்தவரை நெருக்கமான “பொருத்தப்பாட்டை” சாதகமாக்க, ஒப்பீட்டுக் குழு பொருத்தமான நியதிகளின் படி தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த வடிவமைப்பு வலுவானதாக இருக்க முடியும். RCTகளைப் போலவே, ஒப்பீட்டுக் குழுக்களுடனான பகுதியளவிலான

கட்டுப்பாட்டுப் பரிசோதனை வடிவமைப்புகளும் செலவு கூடியவையாக இருக்கலாம், மேலும் சில சமயங்களில் RCTகளை விட அதிக செலவு கொண்டதாக இருக்கும், ஏனெனில் எழுந்தமானம் அல்லாத காரணத்திற்காக பெரியளவான மாதிரிகளைப் பயன்படுத்த வேண்டும். ஒப்பீட்டுக் குழுக்களுடனான பகுதியளவிலான கட்டுப்பாட்டு பரிசோதனை வடிவமைப்புகளும் பரிசோதனை முறைகளுக்கென சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்ற நெறிமுறை சிக்கல்களையும் எழுப்பலாம்.

3. **பரிசோதனை அல்லாத வடிவமைப்பு:** இவை கட்டுப்பாட்டு அல்லது ஒப்பீட்டுக் குழுவைப் பயன்படுத்தாத மதிப்பீட்டு வடிவமைப்புகளாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நேர புள்ளிகளில் (உதா. ஆரம்பநிலை மற்றும் இறுதிநிலை) நடவடிக்கையைப் பெறும் சனத்தொகையில் விளைவுகளை அளவிடும் சோதனைக்கு முந்தைய - சோதனைக்கு பிந்தைய அணுகுமுறைகளை பரிசோதனையற்ற வடிவமைப்புகள் பொதுவாகப் பயன்படுத்துகின்றன. இது இரண்டுக்கும் மேற்பட்ட மதிப்பீட்டு நேர புள்ளிகளில் விளைவுகளை அளவிடுவதற்கு (உதா. இடைநிலை ஆய்வு மற்றும்/அல்லது காலப்போக்கில் தாக்கத்தின் நிலைத்தன்மையை ஆராய்வதற்காக நடவடிக்கை முடிவடைந்த சிறிது காலத்திற்குப் பின்னரான ஒரு ஆய்வு உட்பட) சிறந்ததாக கருதப்படுகிறது.

   பரிசோதனை அல்லாத வடிவமைப்புகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு முக்கிய மட்டுப்பாடு என்னவென்றால், அவதானிக்கப்பட்ட எந்தவொரு தாக்கத்தையும் அவசியமான நடவடிக்கையின் விளைவு என்று கூற முடியாது, இருப்பினும் கலப்பு முறைகளைப் பயன்படுத்துவது (கீழே காண்க) இந்த அபாயங்களைக் குறைக்கலாமென்பதுடன் பகுப்பாய்வில் நம்பிக்கையை அதிகரிக்கும். இந்த வடிவமைப்புகள் பரிசோதனை வடிவமைப்புகளை விட செலவு மிகவும் குறைவானதாக இருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வடிவமைப்பிலும் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படலாம்:

மூடிய வினாக்களைக் கொண்ட ஆய்வுகள் போன்ற **அளவறி ரீதியான முறைகள்** எண்ணியல் தரவு பகுப்பாய்வு மூலமாக உருவாக்கப்பட்டவை என்பதுடன் மாற்றம் நிகழ்கிறதா மற்றும் மாற்றத்தின் அளவைக் கண்டறிவதற்கு இவை பயனுள்ளதாக இருக்கும்.

குவிநோக்க குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் திறந்த வினாக்களுடனான ஆழமான நேர்காணல்கள் போன்ற **பண்பறி ரீதியான முறைகள்** எழுதப்பட்ட மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட விடயங்களை பகுப்பாய்தலிலிருந்து வருவிக்கப்பட்டவை என்பதுடன் காலப்போக்கில் மாற்றம் எப்படி, ஏன் நிகழ்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கும், நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்பாராத விளைவுகளைக் கண்டறியவும் பயனுள்ளதாக இருக்கும். VAW மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சியில் குறிப்பாக, சமூக விழுமியங்கள் போன்ற சில விளைவுகளை அளவிடுவது கடினமாக இருப்பதுடன், அவை மிகவும் திறந்த மற்றும் விவரிப்பு முறைகள் மூலம் சிறப்பாக ஆராயப்படுகின்றன.

**கலப்பு முறைகள்:** வெவ்வேறு முறைகள் மற்றும் ஆதாரங்களில் இருந்து தரவைச் சேகரித்து ஒப்பிட்டுப் பார்ப்பது பகுப்பாய்வில் நம்பிக்கையை அதிகரிக்க உதவும். மூன்று வகையான மதிப்பீட்டு வடிவமைப்பிலும் - பெரும்பாலும் கலப்பு முறைகள் என குறிப்பிடப்படும் - அளவறி ரீதியான மற்றும் பண்பறி ரீதியான முறைகள் இரண்டையும் பயன்படுத்துவதில் வலுவான மதிப்பு உள்ளது என்பது அதிகரித்தளவில் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

சமத்துவமற்ற அதிகார உறவுகள், பரிமாணங்கள் மற்றும் விழுமியங்களில் VAW வேரூன்றியிருப்பதால், இந்த துறையில் M&E க்கு **பங்கேற்பு முறைகள்** மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பங்கேற்பு முறைகள் இந்த ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரிப்பதுடன் M&E செயன்முறைகள் மற்றும் விளைவுகளில் அர்த்தமுள்ள ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டின் மூலம் பெண்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.[3] பங்கேற்பாளர்களின் வெவ்வேறு குழுக்கள் நிகழ்ச்சித் திட்டத்தை மற்றும் தொடர்புடைய மாற்றங்களை எவ்வாறு அனுபவிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்த முறைகள் பயனுள்ளதாக இருக்கும்.

## 5. குறிகாட்டிகளை வடிவமைத்தல்

பொருத்தமான மதிப்பீட்டு வடிவமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், முன்னேற்றம், விளைவுகள் மற்றும் தாக்கத்தை கண்காணிப்பதற்கு குறிகாட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். குறிகாட்டிகள் SMART ஆக இருக்க வேண்டும் (விசேடமானதாக, அளவிடக்கூடியதாக, அடையக்கூடியதாக, தொடர்புடையதாக மற்றும் காலத்துடன் தொடர்புடையதாக). குறிகாட்டிகள் பொதுவாக மூன்று வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

1. **வெளியீட்டு குறிகாட்டிகள்**, நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகளை வழங்குவதன் மூலமாக உடனடியாக குறுகிய கால விளைவுகளை அடைவதன் முன்னேற்றத்தை அளவிடுகிறது. வெளியீட்டு குறிகாட்டிகள் பற்றிய தரவு அடிக்கடி ஒழுங்கான கண்காணிப்பு மூலம் சேகரிக்கப்படுகிறது.

2. **விளைவு குறிகாட்டிகள்**, நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகளின் விளைவாகும் நடுத்தர கால மாற்றத்தை அளவிடுகிறது. விளைவுகள் தொடர்பான தரவு பொதுவாக மதிப்பீட்டின் மூலம் சேகரிக்கப்படுகிறது.

3. **தாக்க குறிகாட்டிகள்** நிகழ்ச்சித்திட்டத்தின் நீண்டகால தாக்கங்களை அளவிடுகிறது. தாக்க குறிகாட்டிகள் பற்றிய தரவு மதிப்பீட்டின் மூலம் சேகரிக்கப்படுகிறது.

M&E கேள்விகளின் தன்மையைப் பொறுத்து அளவறி ரீதியான மற்றும் பண்பறிரீதியான குறிகாட்டிகள் இரண்டும் மூன்று நிலைகளிலும் பயன்படுத்தப்படலாம். ஏழு RESPECT மூலோபாயங்களுக்கான குறிகாட்டிகள் மற்றும் தரவு சேகரிப்பு கருவிகளை உருவாக்குவதற்கான மேலதிக வழிகாட்டுதல் இணைப்பு A இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

### 6. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கருவிகளை விருத்தி செய்தல்

குறிகாட்டிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், அவற்றை அளவிடுவதற்கு தரவு சேகரிப்பு கருவிகள் வடிவமைக்கப்பட வேண்டும். VAW மற்றும் தொடர்புடைய மனப்பாங்குகள், நடத்தைகள் மற்றும் சமூக விழுமியங்களை அளவிடுவதற்கு, பல எண்ணிக்கையான தரவு மூலங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள கருவிகள் உலகளவில் பயன்படுத்தப்படுகின்றன. பல நாடுகளில் (தேசியளவிலான பிரதிநிதித்துவம்) சனத்தொகை மட்டத்தில் தரவுகளை சேகரிக்கப் பயன்படுத்தப்படுகின்ற அளவறிரீதியான ஆய்வுகளுக்கான நியமப்படுத்தப்பட்ட வினாக்களை பின்வரும் வினாத்தாள்களில் காணலாம். குறிப்பிட்ட குறிகாட்டிகளுக்கு இவற்றைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல் இணைப்பு A இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- The World Health Organization (WHO) multicountry study on women's health and domestic violence (WHO MCS).[4]
- The Domestic Violence Module of the Demographic and Health Survey (DHS).[5]
- The United Nations Children's Fund (UNICEF) Multiple Indicator Cluster Survey (MICS).[6]
- International Men and Gender Equality Survey (IMAGES).[7]
- The UN multi-country cross-sectional study on men and violence in Asia and the Pacific (UN MCS).[8]
- The Violence Against Children Survey (VACS).[9]

இது பின்வரும் விடங்களில் இந்த கணக்கெடுப்புக்களில் இருந்து **நியமமான கேள்விகளை** உள்ளடக்குவதை சிறந்த நடைமுறையாகக் கருதுகின்றது:

» பால்நிலை, வயது, இயலாமை நிலை உள்ளிட்ட தனிப்பட்ட குடித்தொகை தரவு[10]

» உள்ளடக்கம், வருமானம், சொத்துக்கள் போன்றவை உள்ளிட்ட வீட்டு சமூக-பொருளாதார தரவு

» பால்நிலை சமத்துவம் மற்றும் குறிப்பிட்ட வகை VAW[11] பற்றிய மனப்பாங்குகள்

» VAW இன் பல்வேறு குறிப்பிட்ட வடிவங்களின் அனுபவம் (பெண்களுக்கான)

» உதவி தேடும் நடத்தைகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் (பெண்களுக்கான)[12]

குறிப்பான சூழல், கையாளப்பட வேண்டிய வன்முறை வகைகள், நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பு மற்றும் மாற்றத்தின் கோட்பாடு மற்றும் குறிப்பிட்ட இலக்கு சனத்தொகை ஆகியவற்றைப் பொறுத்து, VAW அனுபவம் மற்றும் செயற்பாட்டிற்கான ஆபத்து காரணிகள் பற்றிய முக்கியமான தரவை வழங்குவதற்கு **விருப்ப தொகுதிகள்** சேர்க்கப்படலாம். உதாரணமாக:

» மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு (அளவு, தடவைகள்)[13]

» உளஆரோக்கியம் மற்றும் மனச்சோர்வு[14]

» VAW இன் பல்வேறு குறிப்பிட்ட வடிவங்களின் செயற்பாடு (ஆண்களுக்கான, பெண்களுக்கான)[15]

» குழந்தை வளர்ப்பு மற்றும் சிறுவர்களின் ஒழுக்கம் தொடர்பான மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகள்[16]

» VAW இலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் தொடர்பான மனப்பாங்குகள்[17]

» சமூக விழுமியங்கள் மற்றும் நியமக் குழுக்களைப் புரிந்துகொள்வதற்கான மற்றவர்களின் மனப்பாங்குகள் பற்றிய எண்ணங்கள்[18]

மேலதிகமாக, பெண்கள், ஆண்கள், சமூக உதவியாளர்கள், களப் பணியாளர்கள், சமூகத் தலைவர்கள், பெண்கள் உரிமை அமைப்புகள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருடன் ஆழமான நேர்காணல்கள், குவிநோக்க குழுக்கள் மற்றும் சமுதாய பயிலரங்குகள் ஆகியவற்றிற்காக பல பண்பறி ரீதியான கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வரைந்த சிறிய படங்களைப் (vignettes) பயன்படுத்துவது (வெளிவராத கதைகள்) விழுமியங்களை ஆராய்வதற்கான ஒரு பயனுள்ள வழிமுறையாகும்.[19]

### 7. ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவை இசைவாக்கம் மற்றும் தாக்கத்தை அதிகரிப்பதை ஆதரிப்பதை உறுதி செய்தல்

VAW தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இசைவாக்கம் மற்றும் தாக்கத்தை அதிகரிக்க ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை நடத்தும் போது மனதில் கொள்ள வேண்டிய பல மேலதிக பரிசீலனைகள் உள்ளன.

**இசைவாக்கம்:** தடுப்பு அணுகுமுறைகள், கூறுகள் மற்றும் முறைமைகள் உள்ளூர் சூழலுக்கு பொருத்தமானவை என்பதை உறுதிப்படுத்த, VAW தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக மாற்றியமைக்க, உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி முக்கியமானது. ஆராய்ச்சி மற்றும் M&E ஆகியன இசைவாக்கத்தை ஆதரிக்கும் சில மேலதிகமான வழிமுறைகள் உள்ளன.


- VAW தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பின்பற்றும் போது, அசல் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகளுக்கான நம்பகத்தன்மையை பேணுவது முக்கியமானது. தரவை கண்காணிப்பது நம்பகத்தன்மையை தொடரவும், முக்கிய கூறுகள் மற்றும் பண்புகள் பேணப்படுவதை உறுதி செய்யவும் உதவும்.
- நிகழ்ச்சித் திட்ட அமுலாக்கத்தின் செயன்முறை மதிப்பீடுகள் (அதாவது உள்ளீடுகள், செயற்பாடுகள், நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகள்) எது வேலை செய்கிறது மற்றும் எது வேலை செய்யவில்லை, மற்றும் மேலதிக இசைவாக்கங்கள் தேவையா என்பதை அறிவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவும்.

**தாக்கத்தை அதிகரித்தல்:** WHO/ExpandNet கூட்டமைப்பு தாக்கத்தை அதிகரித்தல் என்பதை, "தாக்கத்தை அதிகரிப்பதற்கான நோக்காகக்கொண்ட முயற்சி... பரீட்சார்த்த அல்லது பரிசோதனை நிகழ்ச்சித் திட்டங்களில் அதிக மக்களுக்கு பயனளிப்பதற்கும், கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்ட மேம்பாட்டை நீடித்த அடிப்படையில் மேம்படுத்துவதற்குமாக வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்ட புத்தாக்கங்கள்" என வரையறுக்கிறது.[20] தாக்கத்தை அதிகரித்தலை புரிந்து

## கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E)

கொள்ளும் சமுதாயம் (CUSP) - VAW தடுப்பு மற்றும் பால்நிலை சமத்துவம் உள்ளிட்ட சமூக விழுமியங்களை மாற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல், பின்பற்றுதல் மற்றும் தாக்கத்தை அதிகரிப்பதற்கு பணியாற்றும் நிறுவனங்களின் குழு - அவை தாக்கங்களை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை உருவாக்குவதுடன் அவற்றில் சில ஆராய்ச்சி மற்றும் M&E ஆகியவற்றில் தாக்கங்களை கொண்டுள்ளன[21]

- தாக்கத்தை அதிகரிப்பதில் VAW தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கும் போது நம்பகத்தன்மை மிகவும் முக்கியமானது, ஆனால் வளங்களின் பற்றாக்குறை மற்றும் அனைத்தையும் உள்ளடக்குவதை விரிவுபடுத்துவதற்காக காலஎல்லை, பயிற்சிநெறி மற்றும் வழிகாட்டல், செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எண்ணிக்கை அல்லது பிற நிகழ்ச்சித்திட்ட கூறுகளை குறைப்பதன் மூலம் செலவை சிக்கனப்படுத்துவதற்கான கோரிக்கை காரணமாக அடிக்கடி பாதிக்கப்படுகிறது எனவே, நம்பகத்தன்மையை தொடர்வதற்கும், பிரதான நிகழ்ச்சித் திட்டக் கூறுகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தவும் கண்காணிப்புத் தரவு பயன்படுத்தப்பட வேண்டும்.
- VAW தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு RCT அல்லது பிற வகை பரிசோதனை அல்லது பகுதியளவிலான கட்டுப்பாட்டுப் பரிசோதனை மதிப்பீடு பொருத்தமானதாக இருக்கலாம், இருப்பினும், தாக்கத்தை அதிகரிப்பதில் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு இத்தகைய அணுகுமுறைகள் பொருத்தமானதாக இருக்காது. நிகழ்ச்சித் திட்டங்களை தாக்கத்தை அதிகரிப்பதற்கு பிரதிபலிக்கும் போது மாற்றத்திற்கான பாதைகள் மற்றும் மாற்றத்தின் பொறிமுறைகளைப் புரிந்து கொள்வதற்கு மற்றைய முறைமைகள் தேவைப்படலாம்.



## VAW தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டின் நெறிமுறைகள்

VAW நிகழ்ச்சித் திட்டத்தின் M&E நடாத்துவது, மற்றைய நிகழ்ச்சித் திட்டத் துறைகளில் M&E இற்காக வழமையாக எதிர் கொள்ளப்படும் சவால்களுக்கு மேலதிகமாக பல நெறிமுறை மற்றும் பாதுகாப்பு சவால்களை எழுப்புகிறது. 2001 இல் WHO, VAW நிகழ்ச்சித் திட்டத்தின் M&E க்கு பொருந்தக்கூடிய VAW மீதான நெறிமுறை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக எட்டு கொள்கைகளை உருவாக்கியது (சமீபத்தில் இவற்றை 2016 இல் புதுப்பித்தது). அட்டவணை ஒன்று VAW மீதான ஆராய்ச்சி அல்லது மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைத்தல், திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றுக்கான பரிந்துரைகளுடன் கூடியதாக ஒவ்வொரு கொள்கையின் சுருக்கத்தையும் கொண்டுள்ளது.[22] முழுமையான பரிந்துரைகளை இரண்டு WHO நெறிமுறை வழிகாட்டுதல் ஆவணங்களில் காண முடியும்.[23] மிக சமீபத்திய WHO வழிகாட்டுதல் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள எட்டு அடிப்படைக் கொள்கைகளுக்கான மேலதிக நெறிமுறைக் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளதுடன், அவற்றில் சில குறிப்பிட்ட வகையான M&E முறைகள் மற்றும் அணுகுமுறைகளுக்கு தனித்துவமானவையாகும்.

### அட்டவணை 1: VAW பற்றிய நெறிமுறை ஆராய்ச்சிக்கான WHO அடிப்படைக் கொள்கைகள்

**1** **பதிலளித்தவர்கள் மற்றும் ஆராய்ச்சி குழுவின் பாதுகாப்பு மிக முக்கியமானதுடன் அனைத்து செயற்திட்ட தீர்மானங்களுக்கும் வழிகாட்ட வேண்டும்.**

- ✓ நீண்ட காலத்திற்கான மதிப்பீடு அல்லது ஆராய்ச்சியில் நடைபெறும் காலத்தின் அடிப்படையில் பெறுவது உட்பட, பங்கேற்பாளரின் தகவலறிந்த சம்மதம் பெறப்பட்டதை உறுதிசெய்யவும்.
- ✓ தனிப்பட்ட அமைப்புகளில் நேர்காணல்களை நடத்துதல்.
- ✓ பதிலளிப்பவர்கள், வீட்டு உறுப்பினர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களுக்கு ஆய்வை பெண்களின் ஆரோக்கியம் அல்லது குடும்ப உறவுகள் தொடர்பான ஆய்வாக விபரிக்கவும்.
- ✓ குடும்ப வன்முறை தொடர்பில் ஒரு வீட்டிற்கு ஒரு பெண்ணை மட்டுமே நேர்காணல் செய்யுங்கள், மற்ற குடும்ப உறுப்பினர்களை நேர்காணல் செய்யும்போது வன்முறை பற்றிய கேள்விகளைச் சேர்க்க வேண்டாம். தம்பதிகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இரு பங்காளர்களும் நேர்காணல் செய்யப்படும்போது இதற்கு விதிவிலக்கு உள்ளது, இதில் ஆபத்துகள் கணிசமாகக் குறைக்கப்படுவதுடன் நிகழ்ச்சித் திட்டமே உதவி மற்றும் ஆதரவை வழங்க முடியும்.
- ✓ நேர்காணல் செய்பவர்கள் குறுக்கீடுகளைச் சமாளிப்பதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

ஆய்வை அமுலாக்குவதற்கு முன்னர், கலாச்சார ரீதியாக பொருத்தமான ஆய்வுக் கருவிகளின் வடிவமைப்பை அறிவதற்காக, உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி மற்றும் பங்குதாரர் பகுப்பாய்வு ஆகியவற்றை மேற்கொள்ளுங்கள்.

**2** **ஆய்வுகள் செய்முறை ரீதியாக சிறப்பாக இருக்க வேண்டியதுடன் வன்முறையின் குறைவான அறிக்கையிடலை எவ்வாறு குறைப்பது என்பது தொடர்பான தற்போதைய ஆராய்ச்சி அனுபவத்தின் மீது உருவாக்கப்பட வேண்டும்.**

- × VAW நிகழ்ச்சித் திட்டங்களின் மோசமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் அமுலாக்கப்பட்ட M&E ஐ நடாத்துவது நெறிமுறையற்றது. இது வளங்களை வீணாக்குவதுடன், பெண்களின் வன்முறை குறித்த குறைவான அறிக்கையிடுதலுக்கு பங்களிக்கலாம் மற்றும் பெண்களை அதிகரித்த தீங்கு விளைவிக்கும் அபாயத்திற்கு தள்ளலாம்.
- ✓ பொருத்தமான கருவிகள் மற்றும் முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் நேர்காணல் செய்பவர்களுக்கு அவற்றை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

**3 பெண்களின் பாதுகாப்பு மற்றும் தரவுகளின் தரம் ஆகிய இரண்டையும் உறுதிப்படுத்துவதற்கு இரகசியத்தன்மையைப் பாதுகாப்பது அவசியமாகும்.**

- ✓ நேர்காணல் செய்பவர்கள் இரகசியத்தன்மையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதுடன் அதற்கேற்ப பயிற்சியளிக்கப்படுவதை உறுதிசெய்யவும்.
- × கேள்வித்தாள்களில் பங்கேற்பாளர்களின் பெயர்களை ஒருபோதும் பதிவு செய்ய வேண்டாம். மாறாக, தனிப்பட்ட அடையாளக் குறியீடுகளைப் பயன்படுத்துவதுடன், அனைத்து அடையாள குறியீடுகளையும் தரவுகளிலிருந்து தனித்தனியாக வைத்திருக்கவும்.
- ✓ வரைபட்டிகைகள் (tablets) அல்லது பிற டிஜிட்டல் சாதனங்களை தரவு சேகரிப்பதற்காகப் பயன்படுத்தினால், வரைபட்டிகைகள் கடவுச்சொல் மூலமாக பாதுகாக்கப்பட்டிருப்பதையும், எல்லாத் தரவும் மறைக்கப்பட்ட குறியீடாக்கப்பட்டுள்ளதையும் உறுதிசெய்யவும்.
- ✓ எல்லாத் தரவும் பூட்டிய பெட்டிகள் அல்லது கடவுச்சொல் மூலமாக பாதுகாக்கப்பட்ட கோப்புகளில் வைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும்.
- ✓ ஒலிப்பதிவு செய்வதற்கு முன் பங்கேற்பாளர்களின் ஒப்புதலைப் பெறுவதுடன் ஒலிப்பதிவின் எழுத்துருவாக்கத்திற்கு பிறகு பதிவுகளை நீக்கவும்.
- ✓ அறிக்கையிடும் போது, குறிப்பிட்ட சமூகத்தையோ அல்லது தனி நபரையோ அடையாளம் காண முடியாத வகையில் போதுமான அளவு தரவு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதில் அவதானமாக இருங்கள்.
- ✓ நீண்ட காலத்திற்கான ஆய்வுகளில் பங்கேற்பாளர்களை மீண்டும் தொடர்புகொள்வதற்கு அல்லது தரவு சேகரிப்பைப் பின்தொடர்வதற்கு பாதுகாப்பான மற்றும் பொருத்தமான முறைமைகள் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்யவும்.

**4 அனைத்து ஆராய்ச்சி குழு உறுப்பினர்களும் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு பயிற்சி மற்றும் தொடர்ச்சியான ஆதரவைப் பெற வேண்டும்.**

- ✓ ஆராய்ச்சி மற்றும் M&E ஊழியர்களுக்கு VAW, பால்நிலை சமத்துவம் மற்றும் வன்முறையில் இருந்து தப்பியவர்கள் தொடர்பான அவர்களின் சொந்த பால்நிலை தொடர்பான சார்புகள் மற்றும் ஒரே மாதிரியான உள எண்ணங்களை எவ்வாறு அங்கீகரிப்பது மற்றும் சமாளிப்பது தொடர்பான பயிற்சி தேவைப்படுகிறது.
- ✓ தரவு சேகரிப்பாளர்கள் உட்பட ஊழியர்களுக்கு, ஆராய்ச்சி ஊழியர்களுக்கு அல்லது வன்முறையை அனுபவித்த ஊழியர்களின் விடயத்தில், நேர்காணல்கள் எவ்வாறு இரண்டாம் நிலை அதிர்ச்சி உணர்வை ஏற்படுத்தலாம் என்பதற்கான பயிற்சி மற்றும் தொடர்ச்சியான ஆதரவு தேவையாகும்.

ஆய்வில் பங்கேற்பவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்களினால் ஊழியர்கள் வன்முறைக்கு ஆளாக நேரிடலாம், மேலும் பாதுகாப்பான போக்குவரத்து, பொருத்தமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செயன்முறைகள் உள்ளிட்ட தொடர்ச்சியான வளங்கள் மற்றும் பாதுகாப்பு ஆதரவு தேவைப்படுகிறது.

**5 ஆய்வின் வடிவமைப்பானது, ஆய்வின் மூலமாக பங்கேற்பாளர்களுக்கு ஏற்படக்கூடிய துயரங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

- ✓ நேர்காணலின் ஆரம்பத்திலோ அல்லது இறுதியிலோ வன்முறைச் செயல்கள் தொடர்பான அல்லது அதனது அனுபவம் தொடர்பான கேள்விகள் நேரடியாகக் கேட்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ✓ நேர்காணல் செய்பவர்களுக்கு வன்முறையைப் பற்றி ஆதரவான மற்றும் முற்கூட்டியே தீர்மானமெடுக்காத முறையில் கேட்பதற்கு பயிற்சி அளிக்கவும்.
- ✓ நேர்காணல்களால் தப்பிப் பிழைத்தவர்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான விளைவுகள், துன்பத்திற்கு எவ்வாறு பதிலளிப்பது மற்றும் தேவைப்பட்டால் நேர்காணலை எவ்வாறு நிறுத்துவது என்பது குறித்து நேர்காணல் செய்பவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதை உறுதிசெய்யவும்.

**6 கிடைக்கக்கூடிய உள்ளூர் சேவைகள் மற்றும் ஆதரவு மூலங்களுக்கு உதவி கோரும் பெண்களை வழிப்படுத்துவதற்கு களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். குறைந்தளவான வளங்கள் மட்டும் இருந்தால், குறுகிய கால ஆதரவு பொறிமுறைகளை உருவாக்குவது ஆய்வுக்கு அவசியமாக இருக்கலாம்.**

- ✓ தரவு சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு முன், சுகாதாரம், நீதி மற்றும் சமூக சேவைகள் அல்லது பெண்கள் அமைப்புகள் உட்பட, பெண்களைப் வழிப்படுத்தக்கூடிய ஆதரவு அல்லது சேவைகளை வழங்குவதற்கான சாத்தியமான வழங்குநர்களைக் கண்டறியவும்.
- ✓ போதுமானளவு ஆதரவில் பற்றாக்குறை இருந்தால், குறித்த இடத்திலான ஆதரவை வழங்குவதற்கு, பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர், தரவு சேகரிப்பின் போது களப்பணிக் குழுக்களுடன் வருவதை உறுதிசெய்யவும்.

**7** **ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு தங்கள் கண்டறிவுகள் சரியாக விபரிக்கப்பட்டு, கொள்கை மற்றும் நடவடிக்கை மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய உதவுவதற்கான ஒரு நெறிமுறைக் கடமை உள்ளது.**

- ✓ ஆராய்ச்சி மற்றும் M&E முடிவுகள் மீண்டும் கொள்கை, பரப்புரை மற்றும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுவதையும் ஆராய்ச்சியில் பங்கேற்ற குழுக்களுக்கு பொருத்தமானவகையில் வழங்கப்படுவதையும் உறுதிசெய்தல்
- ✓ கண்டறிவுகளை சரிபார்த்தல், பரப்புதல் மற்றும் பிரயோகித்தல் ஆகியவற்றில் பங்கு வகிக்கக்கூடிய ஆலோசனைக் குழுக்கள் அல்லது பங்குதாரர் ஈடுபாட்டுக் குழுக்களை நிறுவுதல்.

**8** **நெறிமுறை மற்றும் செய்முறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது வன்முறைக் கேள்விகள் பிற நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஆய்வுகளில் மட்டுமே இணைக்கப்பட வேண்டும்.**

- ✓ வன்முறை பற்றிய கேள்விகளை ஆய்வுகளில் ஒருங்கிணைத்தல் அல்லது ஏனைய நோக்கங்களுக்காகவும் விடயங்களுக்காகவும் வடிவமைக்கப்பட்ட M&E செயற்பாடுகள் இங்கு வழங்கப்பட்டுள்ள எட்டு கொள்கைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நெறிமுறை மற்றும் செயன்முறைசார் தரநிலைகளை நிவர்த்தி செய்ய முடிந்தால் மட்டுமே இடம்பெற வேண்டும்.

WHO நெறிமுறை வழிகாட்டுதல் ஆவணங்கள், மேலே குறிப்பிட்டுள்ளவற்றுக்கு மேலதிகமான அணுகுமுறைகள் மற்றும் செயன்முறைகள் தேவைப்படுகின்ற சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு எதிரான வன்முறைகள் குறித்த ஆராய்ச்சி அல்லது M&E மேற்கொள்வதிலுள்ள குறிப்பான இடர்களை நிவர்த்தி செய்யவில்லை. சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த தரவுகளை சேகரிப்பதில் பல வழிகாட்டுதல் ஆவணங்கள் உள்ளதுடன், அவற்றில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அட்டவணை 1 இல் வழங்கப்பட்ட நெறிமுறை ஆராய்ச்சிக்கான கொள்கைகள் பெரும்பாலும் சிறுவர்களுக்குப் பொருந்தும் என்றாலும், சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்குப் பொருந்தும் மேலதிக கொள்கைகள் அட்டவணை 2 இல் சேர்க்கப்பட்டுள்ளன.[24]

## அட்டவணை 2: சிறுவர்களுக்கு எதிரான வன்முறை மீதான நெறிமுறை ஆராய்ச்சிக்கான மேலதிக கொள்கைகள்

**தன்னார்வமான ஒப்புதல் மற்றும் சம்மதம்**

18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பொதுவாக ஆராய்ச்சி அல்லது M&E இல் பங்கேற்பதற்கு சட்டப்பூர்வமான சம்மதத்தை வழங்க முடியாதென்பதுடன், இதில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்கள் சார்பாக ஒப்புதலளிக்க வேண்டும். இருப்பினும், ஒரு பாதுகாவலர் அல்லது பெற்றோர் சம்மதம் அளித்தால், பங்கேற்பதற்கு தன்னார்வமான, தகவலறிந்த ஒப்புதலை வழங்க அல்லது பங்கேற்பதற்கு மறுப்பதற்கு சிறுவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். பெற்றோரின் அனுமதி மற்றும் ஒப்புதல் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமா என்பதை பரிசீலிக்க ஆராய்ச்சியாளர்களும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துபவர்களும் தயாராக இருக்க வேண்டும். உதாரணமாக, ஆராய்ச்சி அல்லது M&E பற்றிய பெற்றோரின் அறிவு சிறுவர்களை வன்முறை அல்லது துஸ்பிரயோகத்திற்கு ஆளாக்குதல்.[25]

- ✓ ஆய்வை விவரிக்க பயன்படுத்தப்படும் மற்றும் சம்மதத்தை பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மொழி (எழுத்து அல்லது வாய்மொழி) சிறுவனின் வயதுக்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்தவும்.
- ✓ சிறுவர்களின் சம்மதம் தன்னார்வமாக இருப்பது தொடர்பிலும், பங்கேற்க மறுப்பதனால் எதிர்மறையான விளைவுகள் எதுவும் இருக்காது என்பதிலும் வெளிப்படையாக இருக்கவும்.
- ✓ ஒப்புதல்/சம்மதத்தைப் பெறும்போது, சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள்/பாதுகாவலர்களுக்கு ரகசியத்தன்மையின் சாத்தியமான மட்டுப்பாடுகள் குறித்துத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள், அதாவது சிறுவர் துஸ்பிரயோகத்தைப் பற்றி கட்டாயமாகப் முறைப்பாடளிப்பதற்கான சட்டத் தேவைகள் ரகசியத்தன்மைக்கான தேவைகளை மீறலாம் (கீழே காண்க).

**தீங்கு விளைவிக்கும் அபாயத்தைக் குறைத்தல்**

பதிலளிப்பவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் அபாயத்தைக் குறைப்பது அனைத்து ஆராய்ச்சிகளிலும் இன்றியமையாததாக இருப்பினும், சிறுவர்களுடன் குறிப்பாக வன்முறை தொடர்பான விடயங்களில் தரவு சேகரிப்பை நடாத்துவது, சிறுவர்கள் பாதிக்கப்படக்கூடிய குறிப்பிட்ட வகையான அபாயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- ✓ ஆராய்ச்சி நெறிமுறைகள் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய அனைத்து அபாயங்களையும் அடையாளம் காட்டுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும்.
- ✓ சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை அடையாளம் காண்பதற்கு, அறிவுள்ள உள்ளூர் பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கவும்.
- ✓ உணர்வுபூர்வமான விடயங்கள் மற்றும் சிறுவர்களின் மனஉளைச்சலுக்கு எவ்வாறு பதிலளிப்பது உள்ளிட்ட சிறுவர்களுடன் ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்பு நடாத்துவதற்கு ஆராய்ச்சிக் குழு பயிற்றுவிக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்யவும்.
- ✓ சிறுவர் துஸ்பிரயோகத்தை உரிய நிறுவனங்களிடம் கட்டாயமாக முறைப்பாடளிப்பதற்கான தேவைகளின் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் அபாயங்களை நிர்வகிக்க தயாராக இருங்கள். இந்தத் தேவைகள் வெவ்வேறு சூழல்களில் வேறுபட்டதாக இருக்கும், மேலும் முறைப்பாடளிப்பதன் சாத்தியமான நன்மைகள் மற்றும் அபாயங்கள் கலாச்சார மற்றும் சட்ட சூழலுக்கு ஏற்ப பகுப்பாய்வு செய்யப்பட்டு சமநிலைப்படுத்தப்பட வேண்டும்.
- ✓ தேவைப்பட்டால் உடனடி ஆதரவை வழங்கக்கூடிய பயிற்சி பெற்ற சிறுவர் உளநல ஆலோசகர்/உளவியலாளர் ஆராய்ச்சிக் குழுவுடன் இருப்பதை உறுதிசெய்யவும்.

# பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள்


## M&E வழிகாட்டி

Programming Essentials, Monitoring & Evaluation. UNWOMEN Virtual Knowledge Centre to End Violence against Women and Girls.
ஐ.நா பெண்கள் அமைப்பின் மெய்நிகர் அறிவு மையமானது, வழிகாட்டுதல், சம்பவ ஆய்வுகள் மற்றும் வன்முறை பதிலளிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் M&E தொடர்பான உறுதியான நடவடிக்கைகளுக்கான உதாரணங்கள் உட்பட தொடர்புடைய ஆதாரங்களைக் கொண்டுள்ளது.

Global Women's Institute (2019) Participatory Monitoring and Evaluation (M&E) of Gender Based Violence Programs. SVRI Pre-Conference Workshop October 2019, The Global Women's Institute, George Washington University.
VAW மற்றும் GBV நடவடிக்கைகளில் பங்கேற்புடனான M&E அணுகுமுறைகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைச் செயலாக்கம் ஆகியவற்றின் உள்ளடக்கத்துடன், பாலியல் வன்முறை ஆராய்ச்சி பரீட்சார்த்த முயற்சியின் ஈராண்டு மன்றத்தில், பங்கேற்பு M&E பற்றிய மாநாட்டுக்கு முன்னரான பயிலரங்கிற்கு பயன்படுத்தப்படுகின்ற காட்சித்தொகுப்பு.

UNICEF (2018) INSPIRE Indicator Guidance and Results Framework. New York: UNICEF.
அரசாங்கங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், ஏழு INSPIRE மூலோபாயங்களில் காலப்போக்கிலான மாற்றங்களைக் கண்காணிக்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் முடிவுகள் கட்டமைப்பு மற்றும் குறிகாட்டிகளின் முக்கிய தொகுப்பு, அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான விரிவான வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.

ANROWS (2017) Counting on change. A guide to prevention monitoring. Australian National Research Organisation for Women's Safety.
பெண்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதில் சனத்தொகை அளவிலான முன்னேற்றத்தை அளவிடுவதற்கான கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களுக்கான வழிகாட்டி.

DFID (2012) How to Note: Guidance on Monitoring and Evaluation for Programming on Violence against Women and Girls. CHASE Guidance Note Series.
VAW திட்டங்களுக்கான M&E இன் நான்கு முக்கிய நிலைகளை விவரிக்கிறதுடன், M&E சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் M&E ஐ எவ்வாறு அமுல்படுத்துவது என்பது பற்றிய விரிவான வழிகாட்டுதலை வழங்குகிறது.

Bloom, S.S. (2008) Violence Against Women and Girls: A Compendium of Monitoring and Evaluation Indicators. Measure Evaluation, for the USAID East Africa Regional Mission and Inter-agency Gender Working Group.
குறிகாட்டி வரையறையின் வழிகாட்டுதலுடன், குறிகாட்டிகள் எவ்வாறு அளவிடப்பட வேண்டும் மற்றும் தரவைச் சேகரிக்க தேவையான கருவிகளுடன் VAW நிகழ்ச்சித் திட்டத்தின் M&E ஐ அளவிடுவதற்கான குறிகாட்டிகளின் விரிவான தொகுப்பு.

Ellsberg, M. & Heise, L. (2005) Researching Violence Against Women: A Practical Guide for Researchers and Activists. World Health Organization, PATH.
VAW மற்றும் இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான புத்தாக்கமான நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்வதன் முறைமை சார்ந்த மற்றும் நெறிமுறைச் சவால்கள் பற்றிய உள்ளடக்கத்துடனான வன்முறை பதில் மற்றும் தடுப்பு துறையில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்களுக்கான கையேடு.

## நெறிமுறை மற்றும் பாதுகாப்பு - பெண்களுக்கு எதிரான வன்முறை

WHO (2016) Ethical and safety recommendations for intervention research on violence against women. Building on lessons from the WHO publication Putting women first: ethical and safety recommendations for research on domestic violence against women. Geneva: World Health Organization.
VAW பற்றிய ஆராய்ச்சிக்கான அசல் WHO (2001) நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்புப் பரிந்துரைகளின் புதுப்பிப்பு (கீழே காண்க), மேலும் சமீபத்திய சான்றுகளை உருவாக்கவும் மேலதிக செயறபாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறுவ கற்றுக்கொள்தல்.

WHO (2001) Putting Women First: Ethical and Safety Recommendations for Research on Domestic Violence Against Women. Geneva: World Health Organization.
எட்டு முக்கிய நெறிமுறை மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் அவற்றை எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றிய விளக்கம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பெண்களின் உடல்நலம் மற்றும் குடும்ப வன்முறை பற்றிய WHO பல நாட்டு ஆய்வின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல் ஆவணம்.

## நெறிமுறை மற்றும் பாதுகாப்பு - சிறுவர்களுக்கு எதிரான வன்முறை

UNICEF (2018) INSPIRE Indicator Guidance and Results Framework. New York: UNICEF.
INSPIRE மூலோபாயங்களுக்கான முடிவுகள் கட்டமைப்பு மற்றும் குறிகாட்டிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலின் மீது ஆவணம் கவனம் செலுத்துகிறது என்றாலும், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த தரவுகளைச் சேகரிப்பதற்கான நெறிமுறைக் கருத்தாய்வுகள் குறித்த அத்தியாயமும் ஆவணத்தில் உள்ளது.

CP MERG (2012) Ethical principles, dilemmas and risks in collecting data on violence against children: A review of available literature. New York: Statistics and Monitoring Section/Division of Policy and Strategy, UNICEF.
வழிகாட்டுதல் ஆவணம் அல்ல, ஆனால் சிறுவர்களுடனான நெறிமுறை ஆராய்ச்சிக்கான எதிர்கால வழிகாட்டுதல்களுக்கான அடிப்படையை உருவாக்குவதற்கான ஆதாரங்களின் தொகுப்பு மற்றும் மீளாய்வு. சிறுவர்களுடன் ஆராய்ச்சி செய்யும் போது ஆராய்ச்சியாளர்கள் சந்திக்கும் பல்வேறு கொள்கைகள், குழப்பங்கள் மற்றும் ஆபத்துகள் பற்றிய விரிவான மீளாய்வை ஆவணம் வழங்குகிறது, மேலும் சிறந்த நடைமுறையில் சில பரிந்துரைகளை வழங்குகிறது.

## இணைப்பு A: RESPECT மூலோபாயங்களுக்கான தாக்கம் மற்றும் விளைவு குறிகாட்டிகள்

RESPECT மூலோபாயங்கள் ஒவ்வொன்றும் தாக்கம், விளைவு மற்றும் வெளியீட்டு அறிக்கைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளதுடன், VAW ஐக் குறைத்தல் அல்லது நீக்குதல் ஆகியவை அனைத்து ஏழு மூலோபாயங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அட்டவணைகள் 3 மற்றும் 4 ஆகியன ஒவ்வொரு மூலோபாயமும் இலக்காகக் கொண்ட தாக்கங்கள் மற்றும் விளைவுகள் இந்த முடிவுகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மற்றும் பின்பற்றப்படக்கூடிய குறிகாட்டிகளின் உதாரணங்கள் இந்த குறிகாட்டிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல் மற்றும் ஆதாரங்களின் சுருக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. இதில் வெளியீடுகளுக்கான குறிகாட்டிகள் சேர்க்கப்படவில்லை என்பதுடன் இவை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அமுலாக்கப்படும் சூழலுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

### அட்டவணை 3: RESPECT மூலோபாய தாக்கங்கள், குறிகாட்டிகள் மற்றும் வழிகாட்டுதல்

குறிப்பு: RESPECT கட்டமைப்பில் வெவ்வேறு மூலோபாயங்களால் பங்களிக்கப்படும் நான்கு தாக்க முடிவுகள் உள்ளதுடன், இவை அட்டவணை 3 இல் தாக்கங்கள் 1 முதல் 4 வரை பெயரிடப்பட்டுள்ளன. தொடர்புடைய குறிகாட்டிகள் அதற்கேற்ப பெயரிடப்படுகின்றன (உதா. தாக்கம் 1 க்கு 1.1 மற்றும் 1.2) மேலும் அந்த குறிகாட்டிகள் குறிப்பிட்ட RESPECT மூலோபாயத்திற்கு பொருத்தமானதாக இருந்தால் மட்டுமே பயன்படுத்தப்படும்.

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| **R** உறவுமுறைத் திறன்கள் வலுப்படுத்தப்பட்டது | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | 1.1 எப்போதாவது பங்காளராகவிருந்து கடந்த 12 மாதங்களில் தற்போதைய அல்லது முன்னாள் நெருங்கிய துணையால் உடலியல், பாலியல் அல்லது உளவியல் வன்முறைக்கு ஆளாகியுள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் (SDG குறிகாட்டி 5.2.1) | இந்த குறிகாட்டி SDG 5.2.1 உடன் இணைந்துள்ளதுடன், குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு) அளவிட முடியும். நெருங்கிய பங்காளர் வன்முறை (IPV) என்பது VAW இன் மிகவும் பொதுவான வடிவங்களில் ஒன்றாவதுடன், குறிகாட்டியின் படி தற்போதைய அல்லது முன்னாள் பங்காளர் அல்லது துணையால் நிகழ்த்தப்படும் உடலியல், பாலியல் அல்லது உளவியல் (உணர்ச்சி ரீதியாகவும் குறிப்பிடப்படுகிறது) வன்முறை ஆகியன இதில் அடங்கும். SDG குறிகாட்டி கடந்த 12 மாதங்களில் இடம்பெற்ற IPV இன் எந்தவொரு நிகழ்வையும் அளவிடுவதுடன் 15 வயது முதல் 49 வயது வரையிலான (அதாவது இனவிருத்தி வயது) இளம் பருவ பெண்கள் மற்றும் பெண்களில் இது அளவிடப்படுகிறது. வயதான பெண்களும் IPV-ஐ அனுபவிக்கலாம் என்பதால் வயதின் உச்ச வரம்பு RESPECT குறிகாட்டியில் இருந்து அகற்றப்பட்டது.<br><br>குறிகாட்டியின் அளவீடு IPV வகையை மற்றும் வன்முறையின் வகை, வயது மற்றும் பிற தொடர்புடைய பண்புகளால் பிரிக்கப்பட்ட தரவு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பின்பற்றப்பட வேண்டும். IPV நடவடிக்கைகள் பெரும்பாலும் உடலியல் மற்றும் பாலியல் ரீதியான IPV மீது கவனம் செலுத்துவதுடன் குறைவாகவே உளவியல் வன்முறையில் கவனம் செலுத்துகின்றன. குறைவான தடவைகள் அளவிடப்படும் மற்றொரு வகை IPV பொருளாதார வன்முறை ஆகும், இது சில நேரங்களில் உளவியல் IPV இன் அளவீடுகளுடன் இணைக்கப்படுவதுடன் சில நேரங்களில் IPV இன் தனி வகையாக அளவிடப்படுகிறது. உணர்ச்சி மற்றும் பொருளாதார IPV பெண்கள் மீது தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் IPV நடவடிக்கைகளில் இணைக்கப்பட வேண்டும் என்று சமீபத்திய சான்றுகள் தெரிவிக்கின்றன.[26] |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| | | | WHO MCS ஆனது உடலியல் மற்றும் பாலியல் ரீதியான IPV ஐ அளவிட வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான கேள்விகளை உருவாக்கியதுடன், இவை பல பிராந்தியங்கள் மற்றும் நாடுகளில் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கேள்விகள் தென்னாப்பிரிக்காவிலும் பின்பற்றப்பட்டு உதாரணமாக, உலகளாவிய நிகழ்ச்சித் திட்ட பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க எது வேலை செய்கிறது என்பதிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டது.[27] உணர்ச்சி மற்றும் பொருளாதார ரீதியாக IPV இன் அளவீடுகளுக்காக, WHO MCS, DHS மற்றும் UN MCS ஆகியவற்றிலிருந்தான விடயங்கள் உள்ளிட்ட பல ஆதாரங்கள் உள்ளன. |
| | | 1.2 கடந்த 12 மாதங்களில் நெருங்கிய துணையைத் தவிர வேறு நபர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளான 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் விகிதம் (SDG குறிகாட்டி 5.2.2) | இந்த குறிகாட்டி SDG 5.2.2 உடன் இணைக்கப்படுகிறது, இது பாலியல் வன்புணர்வு, பாலியல் துஸ்பிரயோகம், கட்டாயப்படுத்தப்பட்ட பாலியலுறவு, முறைதவறிய அல்லது பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பாலியல் வன்முறையை யாரோ ஒருவர் மீது சுமத்தப்படும் பாலியல் செயற்பாடு அல்லது நடத்தை என வரையறுக்கிறது. கடந்த 12 மாதங்களில் 15 வயது முதல் 49 வயது வரை உள்ள இளம்பெண்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக நெருங்கிய பங்காளராக இல்லாத நபர்களால் பாலியல் வன்கொடுமை நடந்ததா என்பதை SDG குறிகாட்டி அளவிடுகிறது. இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். வயதான பெண்களும் IPV-ஐ அனுபவிக்கலாம் என்பதால் வயதின் உச்ச வரம்பு RESPECT குறிகாட்டியில் இருந்து அகற்றப்பட்டது.<br><br>குறிகாட்டியின் அளவீடு IPV வகையை மற்றும் வயது, நிகழ்ந்த இடம் அல்லது குற்றவாளியின் வகை போன்ற பிற தொடர்புடைய பண்புகளால் பிரிக்கப்பட்ட தரவு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பின்பற்றப்பட வேண்டும். நெருங்கிய உறவிலுள்ள பங்காளர் அல்லாதவரின் பாலியல் வன்முறை பற்றிய தரவுகளை சேகரிக்கும் பெரும்பாலான கணக்கெடுப்புகள் கட்டாய உடலுறவு அல்லது கட்டாய உடலுறவுக்கான முயற்சி அல்லது பிற பாலியல் செயல்களை அளவிடுகின்றன.<br><br>நெருங்கிய உறவு அல்லாத ஒருவரின் பாலியல் வன்முறையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கேள்விகளின் எடுத்துக்காட்டுகளை WHO MCS, DHS மற்றும் VACS இல் காணலாம். WHO MCS மற்றும் DHS போன்ற குடித்தொகை கணக்கெடுப்புகள் 15 வயது முதல் பெண்கள் மற்றும் பெண்பிளைகளை மாதிரிகளாக கொண்டாலும், VACS 13 வயது முதலான சிறுவர்களை மாதிரிகளாக கொள்கின்றன. |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| **E**<br>பெண்களின் வலுவூட்டல் | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | 2. பெண்கள் தங்களின் மனித உரிமையை பிரயோகிப்பதுடன் அபிவிருத்திக்கு பங்களிக்கின்றனர். | 2.1 தேசிய பாராளுமன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் வகிக்கும் இடங்களின் சதவிகிதம் (SDG குறிகாட்டி 5.5.1) | இந்த தாக்க அறிக்கை SDG இலக்கு 5.5 உடன் இணைக்கப்படுகிறது, இது பெண்களின் முழுமையான மற்றும் வினைத்திறனான பங்கேற்பையும், அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் தீர்மானமெடுக்கும் நிலைகளில் தலைமைத்துவத்திற்கான சமமான வாய்ப்புகளையும் உறுதி செய்வதாகும். SDG இலக்கு குறிகாட்டி 5.5.1(a), தேசிய பாராளுமன்றங்களில் பெண்கள் வகிக்கும் இடங்களின் சதவிகிதம் மற்றும் 5.5.1(b) உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் வகிக்கும் இடங்களின் சதவிகிதம் ஆகியவை அடங்கும். தரவு மூலங்களில் நாடாளுமன்றங்களிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்கள், தேர்தல் பதிவுகளின் அடிப்படையிலான நிர்வாகத் தரவு அல்லது அமைச்சுக்களிலிருந்து கிடைக்கும் பொது நிர்வாகத் தரவு ஆகியவை அடங்கும். |
| | | 2.2 நில உரிமை மற்றும்/அல்லது கட்டுப்பாட்டில் பெண்களின் சம உரிமைகளை சட்டக் கட்டமைப்பு (தேசவழமைச் சட்டம் உட்பட) உத்தரவாதம் செய்யும் நாடுகளின் சதவிகிதம் (SDG குறிகாட்டி 5.a.2) | இந்த தாக்க அறிக்கை SDG காட்டி 5.a.2 உடன் இணைக்கப்படுவதுடன், இது நில உரிமை மற்றும்/அல்லது கட்டுப்பாட்டை வலியுறுத்துவதுடன் பிற பொருளாதார வளங்கள் மற்றும் பெண்களின் வறுமை குறைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான அணுகல் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிகாட்டியானது ஆறு அளவீடுகளுக்கு எதிராக அளவிடப்பட்டு கண்காணிக்கப்படுவதுடன், இவை முக்கிய வரையறைகள் மற்றும் தரவு ஆதாரங்களுடன் guidance and metadata குறிகாட்டியில் விரிவாக கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஒரு தனி நாடு பெண்களின் நில உரிமைகளை எந்த அளவிற்கு ஆதரிக்கிறது என்பதை அளவிடுவதற்கு இந்த அளவீடுகள் பயன்படுத்தப்படலாம் |
| | | 2.3 பாலியல் உறவுகள், கருத்தடை பயன்பாடு மற்றும் இனவிருத்தி சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் தங்களின் சொந்த தகவலறிந்த முடிவுகளை எடுக்கும் 15-49 வயதுடைய பெண்களின் விகிதம். (SDG குறிகாட்டி 5.6.1) | இந்த தாக்க குறிகாட்டி SDG குறிகாட்டி 5.6.1 உடன் இணைக்கப்படுகிறது, இது பாலியல் உறவுகள் (அவர்கள் தங்கள் கணவர்/பங்காளருடன் உடலுறவு கொள்ள விரும்புகிறாரா இல்லையா என்பது), கருத்தடை பயன்பாடு மற்றும் இனவிருத்தி சுகாதார பாதுகாப்புக்கான அணுகல் ஆகிய மூன்று பகுதிகளிலும் பெண்களின் தீர்மானமெடுத்தலை அளவிடுகிறது. guidance and metadata ஆகியவை DHS மற்றும் MICS ஆகியவற்றிலிருந்து உருவாகின்ற குறிகாட்டியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று கணக்கெடுப்பு கேள்விகளை வழங்குகிறது. இந்த குறிகாட்டி சனத்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்ட பயனாளிகளுக்கு) அளவிட முடியும். |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| | | 2.4. SIGI குறிகாட்டி | தாக்கக் குறிகாட்டிகள் 2.1, 2.2 மற்றும் 2.3 பெண்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தும் மற்றும் அபிவிருத்திக்கு பங்களிக்கும் பல்வேறு பரிமாணங்களை அளவிடுகின்றன. பெண்களின் உரிமைகளின் பல பரிமாணங்களை இணைக்கும் பல பால்நிலை குறியீடுகள் உள்ளன, அவற்றில் சில Data2X ஆவணத்தில், Mapping Gender Data Gaps இல் காணலாம் (பக்கம் 42 இலிருந்து பார்க்கவும்). OECD அபிவிருத்தி மையத்தின் சமூக நிறுவனங்கள் மற்றும் பால்நிலை குறியீடு (SIGI) சமூக நிறுவனங்களில் அவர்களின் உரிமைகளுக்கான அணுகலையும் அபிவிருத்திக்கு பங்களிக்கும் திறனையும் கட்டுப்படுத்துகின்ற பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை அளவிடுகிறது. பெண்கள் உரிமைகளின் குறிப்பிட்ட பரிமாணங்களில் கவனம் செலுத்தும் தாக்கக் குறிகாட்டிகளைப் பயன்படுத்த நிகழ்ச்சித் திட்டங்களை தெரிவு செய்யலாம் அல்லது அதற்கு மாற்றாக, SIGI போன்ற குறியீட்டிலிருந்து எடுக்கலாம்.<br>தற்போது 180 நாடுகளில் அளவிடப்படுகின்ற SIGI, பாரபட்சமான சமூக நிறுவனங்களின் நான்கு பரிமாணங்களை உள்ளடக்கியது:<br>» குடும்பத்தில் பாகுபாடு – சிறுபராயத் திருமணம், பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வீட்டுப் பொறுப்புகள் உட்பட, விவாகரத்துக்கான அணுகல் மற்றும் பரம்பரை உரிமைகளுக்கான அணுகல்.<br>» பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் வன்முறையில் இருந்து சட்டப்பூர்வ பாதுகாப்பு, பெண் பிறப்புறுப்பு சிதைவு (FGM) மற்றும் பெண்களின் இனவிருத்தி சுயாட்சி ஆகியவை உட்பட கட்டுப்படுத்தப்பட்ட உடலியல் அடையாளம்.<br>» நிலச் சொத்துக்கள், நிலம் அல்லாத சொத்துக்கள் மற்றும் முறைசார் நிதிச் சேவைகளுக்கான பாதுகாப்பான அணுகல் மற்றும் பணியிட உரிமைகளுக்கான அணுகல் உட்பட உற்பத்தி மற்றும் நிதி ஆதாரங்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட அணுகல்.<br>» குடியுரிமை உரிமைகள், அரசியல் உரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் நீதிக்கான அணுகல் உட்பட கட்டுப்படுத்தப்பட்ட சிவில் உரிமைகள் |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| **S** சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டது | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | 3. வீடுகள், சமுதாயம் மற்றும் சமூகத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி விளைவுகள் | 3.1 உடல், உள மற்றும் பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் ஆகிய துறைகளில் மேம்படுத்தப்பட்ட விளைவுகளை இலக்காகக் கொண்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | இந்தத் தாக்க அறிக்கைக்கான குறிகாட்டிகள், நிகழ்ச்சித் திட்டத்தால் இலக்காகக் கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் VAW ஐக் குறைப்பது மற்றும் தப்பிப் பிழைத்தவர்களின் உடனடி சுகாதாரத் தேவைகளைக் கையாள்வதுடன், பரந்த சுகாதார விளைவுகளை மேம்படுத்தும் நோக்கத்தில் ஏதேனும் நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள் உள்ளதா என்பதைப் பொறுத்து மேலும் குறிப்பானதாக இருக்க வேண்டும். உதாரணமான குறிகாட்டிகள் பின்வருமாறு:<br>» தொற்றக்கூடிய அல்லது தொற்றாத நோயுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம்<br>» தீங்கு விளைவிக்கும் மது அல்லது போதைப்பொருள் பயன்பாட்டைப் அறிக்கையிடும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம்<br>» கடந்த மாதத்தில் மனஅழுத்த அறிகுறிகளைப் அறிக்கையிடும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம்<br>» உணர்ச்சி ரீதியான நல்வாழ்வை அறிக்கையிடும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம்<br>» பயிற்சி பெற்ற பிறப்பு உதவியாளருடன் கடந்த 12 மாதங்களில் குழந்தையை பெற்றெடுத்த பெண்களின் விகிதம்<br>» அந்த நேரத்தில் மிகவும் சமீபத்தில் பிறப்பு நடைபெற்ற பெண்களின் விகிதம் |
| | | 3.2 பொலிசாரிடம் முறைப்பாடளிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படுகிற VAW சம்பவங்களின் விகிதம் | VAW சம்பவங்களுக்கு பதிலளிக்கும் தொழிற்பாடு, வினைத்திறனான பொலிஸ் மற்றும் சட்ட அமைப்பின் முக்கிய நடவடிக்கையானது, பொலிசாரால் விசாரிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்ட சம்பவங்களின் விகிதமாகும். இந்த குறிகாட்டியை பொலீஸ் மற்றும் நீதிமன்ற பதிவுகள் மூலம் அளவிட முடியும். மேலும் வழிகாட்டுதல்களை இங்கே காணலாம்: பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐ.நா பெண்கள் அமைப்பின் மெய்நிகர் அறிவு மையம் மற்றும் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை: கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குறிகாட்டிகளின் தொகுப்பு. |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| **P**<br>வறுமை குறைக்கப்பட்டது | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | 3. வீடுகள், சமுதாயம் மற்றும் சமூகத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி விளைவுகள் | 3.3 உடல், உள மற்றும் பாலியல் மற்றும் இனவிருத்தி ஆரோக்கியம் ஆகிய துறைகளில் மேம்படுத்தப்பட்ட விளைவுகளை இலக்காகக் கொண்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | தாக்க குறிகாட்டி 3.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | 3.4 பால்நிலை மற்றும் வயது அடிப்படையில் தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சனத்தொகை விகிதம் (SDG குறிகாட்டி 1.2.1) | இந்தத் தாக்கக் குறிகாட்டி SDG குறிகாட்டி 1.2.1 உடன் இணைக்கப்படுகிறது, இது தேசிய வறுமை விகிதம் மற்றும் தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சனத்தொகையின் விகிதத்தை அளவிடுகிறது. இந்த குறிகாட்டியான guidance and metadata வருமானத்தை விட குடும்ப நுகர்வு மூலம் வறுமையை அளவிடுவதற்கு பரிந்துரைப்பதுடன், விரிவான வழிகாட்டுதல் வரையறைகள் மற்றும் தரவு ஆதாரங்களை வழங்குகிறது. |
| | | 3.5 தேசிய வரையறைகளின்படி அதன் அனைத்து பரிமாணங்களிலும் வறுமையில் வாழும் அனைத்து வயதுடைய ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் விகிதம் (SDG குறிகாட்டி 1.2.2) | இந்த தாக்க குறிகாட்டி SDG குறிகாட்டி 1.2.2 உடன் இணைக்கிறது. இந்த SDG குறிகாட்டிக்கான குறிப்பிட்ட guidance and metadata இன்னும் வெளியிடப்படவில்லை இருப்பினும், சில ஆதாரங்கள் பல் பரிமாண வறுமைக் சுட்டெண்ணிலிருந்து பெறப்பட்டுள்ளன, இது மோசமான சுகாதாரம், கல்வியின்மை, வாழ்க்கைத் தரத்தின் பற்றாக்குறை, வருமானம் இல்லாமை, வலுவூட்டப்படாமை, மோசமான வேலைத் தரம் மற்றும் வன்முறையின் அச்சுறுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பற்றாக்குறையை அளவிடுகிறது. |
| | | 3.6 பாலின சமத்துவம் மற்றும் நெருக்கமான பங்காளிகளுடன் மரியாதைக்குரிய உறவுகளை வெளிப்படுத்தும் ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதம் | இந்தத் தாக்க அறிக்கைக்கான குறிகாட்டிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் இன்னும் குறிப்பானதாக இருக்க வேண்டும். நெருக்கமான பங்காண்மைகளில் பால்நிலை சமத்துவததை வெளிப்படுத்துவது கூட்டாக தீர்மானமெடுப்பது மற்றும் குடும்ப வகிபாகங்களில் பால்நிலை சமத்துவப் பிரிவை உள்ளடக்கியிருக்கலாம். மரியாதைக்குரிய உறவுகளை நிரூபிப்பதில் மதிப்பு, சுயமதிப்பு மற்றும் மற்றவர்களின் உரிமைகளுக்கான மரியாதை பதிலளிப்பவர் மற்றவர்களைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறார் மற்றும் அவர்கள் மற்றவர்களால் எவ்வாறு நடத்த/மதிக்கப்படுகிறார்கள் என்று உணர்கிறார்கள் ஆகியவை அடங்கும். |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| **E**<br>சூழல்கள் பாதுகாப்பானதாக மாற்றப்பட்டது | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | 1.3 முந்தைய 12 மாதங்களில் பாலினம், வயது, இயலாமை நிலை மற்றும் நிகழ்ந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் உடல் அல்லது பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான நபர்களின் விகிதம் | இந்த குறிகாட்டி SDG 11.7.2 உடன் இணைக்கப்படுவதுடன், பாலியல் துன்புறுத்தலை அச்சுறுத்தும் பாலியல் அர்த்தத்துடன் கூடிய நடத்தை என்றும், உடலியல் ரீதியான துன்புறுத்தல் என்பது ஒருவரின் உடல் ஒருமைப்பாடு மற்றும்/அல்லது உணர்ச்சி ரீதியான துன்பத்திற்கு பயத்தை ஏற்படுத்தக்கூடிய துன்புறுத்தல் சம்பந்தப்பட்ட பிற நடத்தைகள் என்றும் வரையறுக்கிறது. இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம்.<br>இந்த குறிகாட்டி பாலினம், வயது, இயலாமை நிலை மற்றும் நிகழ்ந்த இடம் ஆகியவற்றால் பிரிக்கப்பட்டுள்ளது. SDG குறிகாட்டி 11.7.2 இற்கான வழிகாட்டி குடும்பங்களுக்கான கணக்கெடுப்புகளில் சேர்க்கப்பட வேண்டிய எட்டு கேள்விகள் உள்ளடங்கலாக குறிகாட்டியை அளவிடுவதற்கான முறைகளை உள்ளடக்கியது. |
| | 4. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | 4.1 18 வயதிற்குள் பாலியல் வன்முறையை அனுபவித்த 18-29 வயதுடைய இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் (SDG 16.2.3) | இந்த குறிகாட்டி SDG 16.2.3 உடன் இணைக்கப்படுகிறது, இது 18 வயதிற்குட்பட்டவர் மீதான பாலியல் வன்முறையை 17 வயது அல்லது அதற்கு குறைவான சிறுவன் மீது சுமத்தப்படும் பாலியல் துஸ்பிரயோகம், பாலியல் வற்புறுத்தல், வணிகரீதியான பாலியல் சுரண்டல் (கடத்தல் உட்பட), சிறுவர் விபச்சாரம் மற்றும் பாலியல் சுரண்டல் அல்லது அடிமைத்தனம் என்று வரையறுக்கின்றது. இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம்.<br>இந்த குறிகாட்டி 18-29 வயதுடைய பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் அளவிடப்படுகிறது. பாலியல் வன்முறையின் நடவடிக்கைகளின் அளவீடுகள் வன்முறையின் வகை மற்றும் குற்றவாளியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். சில M&E கருவிகளில் வன்முறை நடந்த இடம் மற்றும் எந்த வயதில் வன்முறை இடம்பெற்றது ஆகியவையும் அடங்கும்.<br>சிறு பராயத்தில் அனுபவித்த பாலியல் வன்முறை, துஸ்பிரயோகம் மற்றும் சுரண்டல் பற்றிய விரிவான கேள்விகளின் தொகுப்பை VACS கொண்டுள்ளதுடன், பல்வேறு வகையான பாலியல் வன்முறைகள், வன்முறையில் ஈடுபடுபவர்கள், பதிலளிப்பவர் வன்முறையை அனுபவித்த வயது மற்றும் குற்றவாளியின் வயது ஆகிய அளவீடுகளை உள்ளடக்குகிறது. |

| மூலோபாயம் | தாக்கம் | குறிகாட்டிகள் | வழிகாட்டுதல் |
|---|---|---|---|
| | | 4.2 கடந்த மாதத்தில் பராமரிப்பாளர்களால் ஏதேனும் உடலியல் ரீதியான தண்டனை மற்றும்/அல்லது உளவியல் ஆக்கிரமிப்புகளை அனுபவித்த 1-17 வயதுடைய பெண்பிள்ளைகள் மற்றும் சிறுவர்களின் விகிதம் (SDG 16.2.1) | இந்த தாக்க குறிகாட்டி SDG 16.2.1 உடனும், INSPIRE: சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஏழு மூலோபாயங்களுடனும் இணைக்கப்படுகிறது. உடலியல் ரீதியான தண்டனை குலுக்கல், அறைதல், தாக்குதல் அல்லது அடித்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்களை உள்ளடக்குவதுடன் உளவியல் ஆக்கிரமிப்பில் வாய்மொழி துஸ்பிரயோகம், கூச்சலிடுதல், கத்துதல் அல்லது பெயரை அழைப்பது ஆகியவை அடங்கும். 1-17 வயதுடைய சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்கு கடந்த மாதத்தில் ஏற்பட்ட தண்டனை அல்லது ஆக்கிரமிப்பு அனுபவத்தை அளவிடுவதுடன், பாலினம், வயது மற்றும் வன்முறையின் வகை ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும். இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம்.<br><br>VACS ஆனது, பராமரிப்பாளர்களால் நிகழ்த்தப்படும் உடல் அல்லது உணர்ச்சி ரீதியான வன்முறை தொடர்பான சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினரின் அனுபவங்கள் குறித்த கேள்விகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. பல ஆய்வுகள் அதற்குப் பதிலாக உடல் ரீதியான தண்டனை மற்றும் உளவியல் ஆக்கிரமிப்புகளைப் பயன்படுத்தி பெற்றோர்/ பராமரிப்பாளர் அறிக்கைகளை அளவிடுகின்றன. உதாரணமாக, MICS சிறுவர் ஒழுக்க தொகுதியில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5-17 வயதுடையவர்களுக்கான தனியான நடவடிக்கைகள் உள்ளன. இந்த குறிகாட்டிக்கான மேலதிக வழிகாட்டுதலை INSPIRE குறிகாட்டி வழிகாட்டுதல் மற்றும் முடிவுகள் கட்டமைப்பு மற்றும் காட்டி 16.2.1க்கான SDG வழிகாட்டுதல் ஆகியவற்றில் காணலாம். |
| **C**<br>**சிறுவர் மற்றும் இளம் பருவத்தினரின் துஸ்பிரயோகம் தடுக்கப்பட்டது** | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | 4. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 4.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 4.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 4.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 4.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| **T**<br>**உருமாற்றப்பட்ட மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள்** | 1. VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | தாக்க குறிகாட்டி 1.1 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | தாக்க குறிகாட்டி 1.2 இனை பார்க்கவும் | தாக்க குறிகாட்டி 1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |

## அட்டவணை 4: RESPECT மூலோபாயத்தின் விளைவுகள், குறிகாட்டிகள் மற்றும் வழிகாட்டுதல்

குறிப்பு: அட்டவணை 4 இல், R மூலோபாயத்தின் கீழ் உள்ள விளைவு அறிக்கைகள் R1, R2 மற்றும் R3 என பெயரிடப்பட்டுள்ளன. தொடர்புடைய குறிகாட்டிகளும் பெயரிடப்பட்டுள்ளன, உதாரணமாக விளைவு R1 இனுடைய விளைவு அறிக்கைகளுக்கு R1.1, R1.2 மற்றும் R1.3 எனவும் அதேபோல் பிற விளைவு அறிக்கைகளுக்கும் பெயரிடப்பட்டுள்ளது. இந்த பெயரிடுதல் அதன் இலகுத்தன்மைக்காக மூலோபாயம் முழுவதும் பின்பற்றப்பட்டுள்ளது.

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| **R**<br>**உறவைப் பேணும் திறன்கள் வலுப்படுத்தப்பட்டது** | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | R1 பால்நிலை சமத்துவமும் மரியாதை அளிப்பும் நெருங்கிய மற்றும் குடும்ப உறவுகளில் நடைமுறைப்படுத்தப்-படுகின்றன | R1.1 வீட்டுக்கான தீர்மானம் மேற்கொள்ளலில் (தனியாகவோ அல்லது கூட்டாகவோ) பங்கேற்கும் 15-49 வயதுக்குட்பட்ட தற்போது பங்காளராக உள்ள பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | இந்த விளைவு குறிகாட்டி INSPIRE இன் குறிகாட்டி 7.3 உடன் இணைக்கப்படுகிறது, ஆனால் அளவீட்டு வடிவத்திலிருந்து சிறிது வேறுபடுகின்றது. குடும்பத்தில் தீர்மானமெடுப்பதை INSPIRE, பெண்களின் சொந்த ஆரோக்கியம், பெரியளவிலான வீட்டுக்கான கொள்முதல் அல்லது குடும்பம் அல்லது நண்பர்களிடம் செல்வது தொடர்பான தீர்மானங்களில் அவர்களின் பங்கேற்பு (தனியாக அல்லது அவர்களின் கணவருடன் கூட்டாக) என வரையறுக்கிறது. இங்கே, தீர்மானம் மேற்கொள்ளலில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் பங்கேற்பு (தனியாக அல்லது அவர்களின் கணவருடன் கூட்டாக) வீட்டுக்கான கொள்முதல் மற்றும் வீட்டு வருமான செலவு போன்ற குடும்பம் தொடர்பான தீர்மானங்களுக்கு மட்டுமே அளவிடப்படுகிறது. பெண்கள் தங்களுடைய சொந்த சுயாட்சி நடவடிக்கைகள் பற்றி தீர்மானமெடுக்கும் பிற வகை தீர்மானமெடுக்கும் முறைகள் வலுவூட்டல் மூலோபாயத்தில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் சுயமான தீர்மானங்களை எடுக்க முடியும் விளைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br>குறிகாட்டியின் அளவீடு பல்வேறு வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பாக பெண்களின் தீர்மானம் மேற்கொள்ளலை அளவிடும் தொடர்ச்சியான கேள்விகளைக் கொண்டுள்ள DHS இலிருந்து பின்பற்றப்பட முடியும். இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். |
| | | | R1.2. வீட்டுப் வகிபாகங்களில் பால்நிலை சமத்துமான பிரிப்பை பின்பற்றியதாக அறிக்கையிட்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | வீட்டு வகிபாகங்களின் பால்நிலை சமத்துவமான பிரிவு என்பது குழந்தை வளர்ப்பு, வீட்டு வேலைகள் மற்றும் பிற வீட்டுப் பணிகள் உள்ளிட்ட வீட்டுக் கடமைகளில் பெண்கள் மற்றும் ஆண்களின் பங்கேற்பு என வரையறுக்கப்படுகிறது. உதாரணமாக, IMAGES கணக்கெடுப்பில் வீட்டு வேலைப் பிரிவு மற்றும் பராமரிப்பில் பங்கேற்பது பற்றிய கேள்விகள் உள்ளன. இது குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | | R1.3. கடந்த 12 மாதங்களில் நெருங்கிய பங்காளரிடமிருந்து நடத்தைகளை கட்டுப்படுத்துவதை அனுபவித்த 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களின் விகிதம் | நெருங்கிய பங்காளரிடமிருந்து கட்டுப்படுத்தும் நடத்தைகள் VAW இன் ஒரு வடிவமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இது IPV இன் மிகவும் கடுமையான வடிவங்களை எதிர்வுகூறக்கூடும். கட்டுப்படுத்தும் நடத்தைகளில் இயக்கத்தை தடுத்தல் அல்லது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான அணுகல் மற்றும் பொறாமை அல்லது அவநம்பிக்கையின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கட்டுப்பாடுகள் ஆகியவை உள்ளடக்கியிருக்கும்.<br><br>DHS ஆனது, பின்வரும் வகையான கட்டுப்பாடுகள் தொடர்பான கணக்கெடுப்பு விடயங்களை உள்ளடக்கிய திருமணக் கட்டுப்பாடு தொடர்பான அதன் தொகுதியின் மூலம் துணையிடமிருந்தான கட்டுப்படுத்தும் நடத்தைகளை அளவிடுகிறது:<br>» அவள் மற்ற ஆண்களுடன் பேசினால் பொறாமை அல்லது கோபம் கொள்ளல்<br>» அவள் விசுவாசமற்றவள் என்று அடிக்கடி குற்றம் சாட்டுதல்<br>» அவளது பெண் நண்பிகளை சந்திக்க அனுமதிக்கவில்லை<br>» அவளது குடும்பத்துடனான தொடர்பைக் குறைக்க முயற்சித்தல்<br>» எல்லா நேரங்களிலும் அவள் எங்கிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள வலியுறுத்துதல்<br>» பண விடயத்தில் அவளை நம்பவில்லை<br>இந்த குறிகாட்டி குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். |
| | | R2. நபர்களுக்கிடையான முரண்பாடுகள் அமைதியாக தீர்க்கப்பட்டன | R2.1. அகிம்சை வழியில் தங்களின் சமீபத்திய மூன்று கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவிட்டதாகப் அறிக்கையிடும் ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதம் | வன்முறையற்ற மோதல் தீர்வு என்பது மோதலைத் தீர்ப்பதற்கான வழிமுறையாக உடலியல் மற்றும் உணர்ச்சி ரீதியான வன்முறையை நிராகரிப்பதும் அமைதியான உரையாடல், இரக்கம், செவிமடுத்தல், கோப முகாமைத்துவம், பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம் மற்றும் சமரசம் உள்ளிட்ட நேர்மறையான தகவல்தொடர்பாடல்களைத் பின்பற்றுகின்றது.<br><br>மோதல் தந்திரோபாய அளவீடுகள், தம்பதிகளுக்கான செயற்பாட்டு மதிப்பீட்டு கருவியின் தகவல் தொடர்பாடல் துணை அளவுகோல்கள், தகவல்தொடர்பாடல் வடிவங்களின் வினாக்கொத்தின் ஆக்கபூர்வமான தகவல்தொடர்பாடல் துணை அளவுகோல்கள் மற்றும் பொது தொடர்பாடல் மற்றும் மோதல் தீர்வு அளவீட்டின் பரஸ்பர ஆக்கபூர்வமான தொடர்பாடல் துணை அளவுகோல் உட்பட குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில், தம்பதிகளுக்குள் வன்முறையற்ற மோதல் தீர்வுகளை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளில் பலவகைகள் உள்ளன. |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | R3. குடும்பங்கள் மற்றும் தம்பதிகள் பால்நிலை சமத்துவத்தை ஒரு விழுமியமாக நம்பி நிலைநிறுத்துவதுடன் VAW இனை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை | R3.1. கணவன் (ஆண்) தனது மனைவியை (பங்காளரை) குறைந்தபட்சம் ஒரு சூழ்நிலையில் கூட அடிப்பது நியாயமானது என ஏற்றுக் கொள்ளும் நபர்களின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. | மோதலைத் தீர்ப்பதற்கும், ஒரு பெண்ணை நெறிப்படுத்துவதற்கும் அல்லது அவமதிப்புகளை கௌரவப்படுத்துவதற்கும் வன்முறை ஒரு சட்டபூர்வமான வழி என்று மக்கள் நம்பும்போது, VAW ஏற்கும் அல்லது நியாயப்படுத்தும் மனப்பாங்கு ஏற்படலாம். இந்த மூலோபாயத்தில், “மக்கள்“ என்பது பங்காளர்கள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களைக் குறிக்கிறது.<br>இந்த குறிகாட்டி WHO MCS மற்றும் DHS போன்ற குடித்தொகை ஆய்வுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒன்றென்பதுடன், இதில் ஐந்து சூழ்நிலைகள் பொதுவாக முன்வைக்கப்படுகின்றன: ஒரு பெண் தன் கணவனிடம் சொல்லாமல் வெளியே சென்றால், அவள் குழந்தைகளைப் புறக்கணித்தால், அவள் கணவனுடன் வாக்குவாதப்பட்டால், அவள் தன் கணவனுடன் உடலுறவு கொள்ள மறுத்தால், அல்லது அவள் தனது உணவை தவிர்த்தால் என்பனவே அவையாகும். சில ஆய்வுகள் மற்ற சூழ்நிலைகளையும் அதாவது ஒரு பெண் தன் கணவன் அல்லது துணைக்கு துரோகம் செய்தல் அல்லது அவள் அவனுக்கு கீழ்ப்படியாமல் இருத்தல் போன்றவற்றையும் அளவிடுகின்றன. இந்த குறிகாட்டி குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். |
| | | | R3.2. பால்நிலை சமத்துவ மனப்பான்மை கொண்டவர்களின் விகிதம் | பால்நிலை சமத்துவமான மனப்பாங்கு என்பது ஆண்கள் மற்றும் பெண்களின் உரிமைகள், வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளில் சமமானதும் சமத்துவமானதும் பற்றிய அணுகுமுறைகளைக் குறிக்கிறது. இந்த மூலோபாயத்தில், “மக்கள்” என்பது பங்காளர்கள் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்களைக் குறிக்கிறது.<br>பால்நிலை சமத்துவமான மனப்பாங்கை அளவிடுவதற்கான ஒரு பயனுள்ள கருவி பால்நிலை சமத்துவமான ஆண்கள் (GEM) எனும் அளவுகோலாகும், இது பல நாட்டு சூழல்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய மக்களின் எண்ணங்கள் மற்றும் மனப்பாங்குகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. |
| **E**<br>**பெண்களை வலுவூட்டுதல்** | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது<br>பெண்கள் தங்களின் மனித உரிமைகளைப் பயன்படுத்தி வளர்ச்சிக்கு பங்களித்து வருகின்றனர் | E1. பால்நிலை சமத்துவமும் மரியாதை அளிப்பும் நெருங்கிய மற்றும் குடும்ப உறவுகளில் நடைமுறைப்படுத்தப்படு-கின்றன | E1.1. வீட்டுக்கான தீர்மானம் மேற்கொள்ளலில் (தனியாகவோ அல்லது கூட்டாகவோ) பங்கேற்கும் 15-49 வயதுக்குட்பட்ட தற்போது பங்காளராக உள்ள பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | தாக்க குறிகாட்டி R1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | | E1.2. வீட்டுப் வகிபாகங்களில் பால்நிலை சமத்துமான பிரிப்பை பின்பற்றியதாக அறிக்கையிட்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | தாக்க குறிகாட்டி R1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | E2. பெண்களும் பெண்பிள்ளைகளும் தன்னாட்சியான தீர்மானங்களை எடுக்க முடியும் | E2.1. வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட, தங்கள் சொந்த வாழ்க்கையைப் பற்றி சுயாட்சியான தீர்மானங்களை எடுக்கக்கூடிய பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | பெண்கள் தன்னாட்சியின் அடையாளமாக பெரும்பாலும் பார்க்கப்படும் சுயாட்சியாக தீர்மானமெடுப்பது, பெண்கள் சுகாதார அணுகல், கருத்தடை சாதனங்கள் மற்றும் நடமாட்டம் (குடும்பத்தினர் அல்லது நண்பர்களைப் பார்ப்பது) போன்ற தங்களுடைய சொந்தச் செயல்களைப் பற்றி தீர்மானம் மேற்கொள்ளலை உள்ளடக்கியதுடன், இது வீட்டு தீர்மானம் மேற்கொள்ளலிருந்து வேறுபட்டது.<br><br>குடும்ப மட்டத்தில் தீர்மானமெடுப்பது தொடர்பான DHS கேள்விகளை மாற்றியமைப்பதன் மூலம் இந்தக் குறிகாட்டியை அளவிட முடியும் (உறவுகள் மூலோபாயத்தின் கீழ் குடும்ப மட்டத்தில் தீர்மானமெடுக்கும் விளைவுகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரிப்பதற்கான வழிகாட்டுதலைப் பார்க்கவும்). மேலதிக முறைகளும் பயன்படுத்தப்படலாம், உதாரணமாக, பெண்கள் தங்களின் சொந்த நடமாட்டம் பற்றிய சுயாட்சியான தீர்மானமெடுத்தல் (உதா. உங்கள் கிராமத்தில் உள்ள ஒரு நண்பர்/குடும்ப உறுப்பினரைப் பார்க்க வீட்டை விட்டு வெளியே நடந்து செல்ல அல்லது நண்பர்/குடும்ப உறுப்பினரைப் பார்க்க பொதுப் போக்குவரத்தில் செல்ல அனுமதிக்கப்படுகிறீர்களா?). |
| | | | E2.2. தன்னாட்சி இருப்பதாகப் அறிக்கையிடும் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | பெண்களை வலுவூட்டல் குறித்த சமீபத்திய பணிகள், தீர்மானமெடுத்தல் பெண்களின் தன்னாட்சியின் முழுமையற்ற அளவீடாக இருக்கலாம் என பரிந்துரைப்பதுடன், தன்னாட்சி நேரடியாகவும் அளவிடப்பட முடியும் என்று தெரிவிக்கிறது. தன்னாட்சி என்பது பெண்களின் வாழ்க்கையின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை வரையறுக்கும் ஸ்திரத்தன்மை மற்றும் இவற்றில் செயற்படுவதற்கான அவர்களின் திறன் என வரையறுக்கப்படுகிறது.[28] பெண்களின் தன்னாட்சியை அளவிடுவது இலக்குகளை நிர்ணயித்தல், திறன் மற்றும் கட்டுப்பாடு (சில நேரங்களில் சுய-செயற்திறன் என குறிப்பிடப்படுகிறது) மற்றும் இலக்குகளின் மீது செயற்படுதல் உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியது. இந்தப் பரிமாணங்களை அளக்கப் பயன்படும் கருவிகளின் உதாரணங்களை உலக வங்கியால் உருவாக்கப்பட்ட 'பெண்களின் தன்னாட்சியை அளவிடுதல்' பற்றிய இந்த வழிகாட்டியில் காணலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | E3. பெண்கள் தங்களின் நிதியியல் சுதந்திரத்தை அதிகரித்துள்ளனர் | E3.1. அதிகரித்த நிதிச் சுதந்திரத்தைப் அறிக்கையிடும் பெண்களின் விகிதம் | பெண்களின் வருமானம் மற்றும் பொருளாதார வளங்களை அணுகுவது வலுவூட்டலுக்கான ஒரு முக்கியமான அளவீடாகும், ஆனால் பெண்கள் தாங்கள் சம்பாதிக்கும் வருமானத்தையோ அல்லது அவர்கள் பெறும் வளங்களையோ கட்டுப்படுத்த முடியாது என்பதால் இது போதுமானதாக இல்லை. பெண்களின் நிதி சுதந்திரம் என்பது பொருளாதார வளங்களுக்கான அணுகல் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் வளங்களில் இருந்து பயனடைதல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும். பொருளாதார வளங்கள் திறன்கள் (உதா. தொழிற்பயிற்சி மூலமாக), நிதி மூலதனம் (உதா. கடன்கள் மற்றும் சேமிப்பு), சமூக மூலதனம் (உதா. சமூக வலைப்பின்னல்கள்) மற்றும் பௌதிக மூலதனம் (உதா. கருவிகள், நிலம்) ஆகியவற்றை உள்ளடக்கலாம். பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வளங்களில் இருந்து பயனடைவதற்காக அதிகாரம் என்பது, பெண்களால் நிதி மூலதனம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது மற்றும் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பற்றி தீர்மானமெடுக்கவும் கட்டுப்படுத்தவும் இயலுமாயிருத்தலாகும். நிதிச் சுதந்திரம் மற்றும் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் ஆகியவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் மற்றும் வினாக்களை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கான மேலதிக வழிகாட்டுதலை ICRW, Oxfam மற்றும் இந்த roadmap இல் காணலாம். |
| | | E4. பெண்கள் பொது வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் பங்கேற்கின்றார்கள் | E4.1. கடந்த 6 மாதங்களில் பொதுக் கூட்டத்தில் பேசிய பெண்களின் விகிதம் | இந்த குறிகாட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை மற்றும் உள்ளூர் சூழலைப் பொறுத்து மாற்றியமைக்கப்பட வேண்டும். இது உள்ளடக்கப்பட வேண்டிய பொதுக் கூட்டங்களின் வகைகள், கால அளவு (உதா. 6 மாதங்கள் அல்லது பிற) மற்றும் எந்தந்தப் பெண்கள் என்பவற்றை குறிப்பிட வேண்டும். இந்த குறிகாட்டி குடித்தொகை மட்டத்தில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட மட்டத்தில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். |
| **S** சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டது | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது குடும்பங்கள், சமுதாயம் மற்றும் சமூகத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி விளைவுகள் | S1. சுகாதாரம், நீதி, பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகளில் இருந்து மேம்படுத்தப்பட்ட நிறுவன பதிலளிப்பு | S1.1. VAW இலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பதிலளிப்பைக் காட்டும் சேவை வழங்குநர்களின் எண்ணிக்கை | இந்த குறிகாட்டி மற்றும் அளவீட்டுக்கான அணுகுமுறைகள் உள்ளூர் மற்றும் நிகழ்ச்சித் திட்ட சூழலுக்கும்,இலக்காக கொள்ளப்பட்ட சேவை நிறுவனங்களுக்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். மேம்படுத்தப்பட்ட நிறுவன பதிலளிப்புகள் பல்வேறு களங்களை உள்ளடக்கியிருக்கலாம், அவையாவன: சேவை பதிலளிப்பை மேம்படுத்துவதற்கு கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளை விருத்திசெய்தல் மற்றும் அமுல்படுத்துதல், பால்நிலை உருமாற்ற கட்டமைப்புகள் அல்லது கலைத்திட்டங்களில் சேவை ஊழியர்களுக்கான பயிற்சியை விருத்திசெய்தல், வசதிப்படுத்துதல் மற்றும் உட்பொதித்தல் மற்றும் விரிவான ஆற்றுப்படுத்தல் அமைப்புகளை விருத்திசெய்தல் என்பனவாகும். பல்வேறு சேவைத் துறைகள் உட்பட, மேம்படுத்தப்பட்ட நிறுவன பதிலளிப்பிற்கான சாத்தியமான துணை குறிகாட்டிகளின் சில உதாரணங்கள், பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை: கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குறிகாட்டிகளின் தொகுப்பு இல் காணலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | S2. சேவை வழங்குனர்கள் மற்றும் நிறுவனங்கள் பால்நிலை சமத்துவத்தை ஒரு விழுமியமாக நம்பி நிலைநிறுத்துவதுடன் VAW இனை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை | S2.1. ஒரு கணவன் (ஆண்) தனது மனைவியை (பங்காளரை) குறைந்தபட்சம் ஒரு சூழ்நிலையில் அடிப்பது நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்ளும் நபர்களின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. | இங்கே குறிகாட்டி R3.1 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும். இந்த S மூலோபாயத்தில் “மக்கள்” என்பது சேவை வழங்கும் ஊழியர்களை சேவைகளின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு குறிக்கின்றது. |
| | | | S2.2. பால்நிலை சமத்துவ மனப்பாங்கு கொண்டவர்களின் விகிதம் | இங்கே குறிகாட்டி R3.2 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த S மூலோபாயத்தில் சேவைகளின் அடிப்படையில் தரம்பிரிக்கப்பட்ட சேவை வழங்கும் ஊழியர்களை குறிக்கின்றது. |
| | | | S2.3. சேவை வழங்குநருக்கு பால்நிலை சமத்துவம் குறித்த பிரத்தியேகமான உள்ளக கொள்கை உள்ளது | பால்நிலை சமத்துவத்திற்கான ஒரு நிறுவனத்தின் உறுதிப்பாட்டை அளவிடுவதற்கான ஒரு வழிமுறை, பால்நிலை தொடர்பான அதனுடைய சொந்த உள்ளக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளைப் பார்ப்பதாகும். இந்த குறிகாட்டி அதற்கு ஒரு எளிய உதாரணம், ஆனால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கான பால்நிலை சமத்துவக் கொள்கையின் குறைந்தபட்ச கூறுகளைக் குறிப்பிடுவதற்கு மேலும் மேம்படுத்துகை தேவையாகும். பால்நிலை கணக்காய்வு அல்லது நிறுவனத்தின் இயலளவு மதிப்பீட்டை மேற்கொள்வதன் மூலம் அல்லது பால்நிலை ஒருங்கிணைப்பு / பிரதான பால்நிலை சரிபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த குறிகாட்டியை மேலும் பலப்படுத்தலாம். உதாரணமாக, ஐ.நா பெண்கள் அமைப்பின் பால்நிலை சமத்துவ இயலளவு மதிப்பீட்டுக் கருவி அல்லது ILOவின் பால்நிலை கணக்காய்வு வசதிப்படுத்துனர்களுக்கான கையேட்டைப் பார்க்கவும். |
| | | | S2.4. உள்ளக VAW முறைப்பாடுகளைக் கையாள சேவை வழங்குநருக்கு ஒரு பிரத்தியேக நடைமுறை உள்ளது | பால்நிலை பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஆகியவற்றின் உள்ளக முறைப்பாடுகளை ஒரு நிறுவனம் கையாளும் விதம், VAW ஐக் கையாள்வதில் அந்த அமைப்பின் அர்ப்பணிப்பின் ஒரு நல்ல குறிகாட்டியாகும். இதை அல்லது இதே போன்ற குறிகாட்டியைப் பயன்படுத்துவதுடன் நிறுவனத்தில் VAW ஐத் தடுப்பதற்கும் நிவர்த்தி செய்வதற்குமான உள்ளகக் கொள்கையின் குறைந்தபட்ச கூறுகளைக் குறிப்பிடுவதற்காக மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | S3. மேம்படுத்தப்பட்ட VAW சேவைகளின் தரமும் பாதுகாப்பும் | S3.1. VAW சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பில் மேம்பட்ட திருப்தியை அறிக்கையிடும் VAW இல் இருந்து தப்பியவர்களின் விகிதம் | இந்த குறிகாட்டி சேவை வழங்கல் வகை மற்றும் தரம் மற்றும் பாதுகாப்பிற்கான தொடர்புடைய தரநிலைகள் உட்பட உள்ளூர் மற்றும் நிகழ்ச்சித் திட்ட சூழல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். உதாரணமாக, நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்காக கொள்ளக்கூடிய தரமான சேவைகளுக்கான சாத்தியமான தரநிலைகளில் அணுகல், செலவு குறைந்த தன்மை, கிடைக்கும் தன்மை மற்றும் பணியாளர் அறிவு, தப்பிப் பிழைத்தவர்களின் நடத்துகை மற்றும் கடினமான சூழ்நிலைகளைக் கையாள்வதிலுள்ள உணர்திறன் ஆகியவை அடங்கும். VAW சேவைகளில் பாதுகாப்பிற்கான சாத்தியமான தரநிலைகளில் தனியுரிமை, இரகசியத்தன்மை மற்றும் வன்முறையின் மேலதிக ஆபத்தைத் தணித்தல் ஆகியவை அடங்கும்.<br><br>பொதுவாக சுகாதார சேவைகள் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சேவைகளில் தப்பிப் பிழைத்தவரின் திருப்தியை அளவிடுவதற்கான ஒரு வழிமுறை, வாடிக்கையாளர் திருப்தி அல்லது வெளியேறும் போதான கணக்கெடுப்புகள் ஆகும், இதில் வெவ்வேறு தரநிலைகள் அல்லது சேவை வழங்கலுடன் தொடர்புடைய அனுபவங்களுக்கான குறிப்பிட்ட கணக்கெடுப்பு விடயங்கள் இருக்கலாம். GBV சுகாதாரத் துறையிலிருந்தான வாடிக்கையாளரின் வெளியேறும் கணக்கெடுப்பின் உதாரணத்தை பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான சுகாதாரத் துறையின் பதிலளிப்பை மேம்படுத்துதல்: அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுக்கான ஆதாரங்களுக்கான கையேட்டில் காணலாம். |
| | | S4. VAW சேவைகளை தப்பிப் பிழைத்தவர்கள் பெற்றுக் கொள்ளுதல் மேம்பட்டது | S4.1. VAW சேவைகளை பயன்படுத்துவதாக அறிக்கையிடும் தப்பிப் பிழைத்தவர்களின் விகிதம் | VAW இனை அனுபவித்த பெண்கள் முறைசார் VAW சேவைகளைப் பயன்படுத்துவதை இந்த குறிகாட்டி அளவிடுகிறது. முறைசாரா தரப்பினர் மற்றும் வலையமைப்புகள் (உதா. நண்பர்கள், குடும்பம், அயல் வீட்டார், சமூகம் அல்லது மதத் தலைவர்கள்) மற்றும் முறைசார் சேவைகள் (உதா. பொலிஸ், சுகாதார வசதிகள், சட்ட சேவைகள், பெண்கள் அமைப்புகள்) உட்பட தப்பிப் பிழைத்தவர்களின் உதவியை தேடும் நடத்தைகள் தொடர்பான கேள்விகளை WHO இனுடைய MCS கொண்டுள்ளது. இவை கடந்த 12 மாதங்களில் VAWஐ அனுபவித்ததாக அறிக்கையிடும் பெண்களிடம் கேட்கப்படுகின்றன. |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| **P**<br>**வறுமை குறைக்கப்பட்டது** | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது<br>குடும்பங்கள், சமுதாயம் மற்றும் சமூகத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரோக்கியம் மற்றும் அபிவிருத்தி விளைவுகள் | P1. வீட்டு வறுமை மற்றும் பொருளாதார அழுத்தம் குறைக்கப்பட்டது | P1.1. உணவுப் பாதுகாப்பின்மையை அறிக்கையிடும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம்-பாலினத்தால் பிரிக்கப்பட்டது | வீட்டு உணவுப் பாதுகாப்பின்மை என்பது குடும்ப வறுமையின் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவீடென்பதுடன் பல ஆய்வுகளில் பெண்களின் IPV அனுபவம் மற்றும் ஆண்களின் IPV குற்றச்செயல்களுடன் வலுவாக தொடர்புடையதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த குறிகாட்டி குடித்தொகை மட்டத்தில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட மட்டத்தில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். உணவுப் பாதுகாப்பின்மையை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளில் உணவுப் பாதுகாப்பின்மை அனுபவத்தின் அளவுகோல் மற்றும் வீட்டு உணவுப் பாதுகாப்பின்மையை அடையும் அளவுகோல் ஆகியவை அடங்கும். |
| | | | P1.2. மொத்த வீட்டு நுகர்வு | நுகர்வு என்பது குடும்ப வறுமையின் ஒரு முக்கியமான அளவீடென்பதுடன், இது உணவு, வீடு, மின்சாரம்/எரிபொருள், வீட்டுப் பொருட்கள், போக்குவரத்து, கல்வி மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினங்களை உள்ளடக்கியிருக்கலாம். தரவு மூலங்கள் மற்றும் தொடர்புடைய கருவிகள் தேசிய செலவின ஆய்வுகளில் இருந்தும், பெண்கள் குழுக்களுக்கான சான்றுகள் கூட்டமைப்பின் (ECWG) பெண்களின் வலுவூட்டல் மற்றும் பெண்கள் குழுக்களின் தாக்க மதிப்பீடுகளில் பொருளாதார விளைவுகளை அளவிடுவதற்கான வழிகாட்டியில் இருந்தும் பெறப்படலாம். |
| | | | P1.3. உள அழுத்தத்தை அனுபவிப்பதாக அறிக்கையிட்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | உள அழுத்தமானது மோசமான உள ஆரோக்கியம் மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை தீர்மானிக்கும் ஒரு முக்கியமான காரணியாகும். வறுமைக்கும் உள அழுத்தத்திற்கும் இடையே உள்ள தொடர்புகள் மற்றும் உள அழுத்தம் மற்றும் வன்முறை அனுபவம் அல்லது வன்முறையை நிகழ்த்துதல் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள் வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்த குறிகாட்டி பெண்கள் மற்றும் ஆண்களின் பொதுவான உள அழுத்த அனுபவங்களை அளவிடுகிறது. உள அழுத்தத்தை அளவிடுவதற்கு பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியானது பல நாட்டு சூழல்களில் பயன்படுத்தப்படுவதுடன், தனிநபர்கள் தங்கள் வாழ்வின் தற்போதைய சூழ்நிலைகளை எந்த அளவிற்கு உள அழுத்தம் நிறைந்ததாக உணர்கிறார்கள் என்பதன் அளவீடான உணரப்பட்ட உள அழுத்த அளவுகோல் (PSS) ஆகும். |
| | | P2. பெண்கள் அதிகரித்த பொருளாதார பாதுகாப்பை கொண்டிருக்கிறார்கள் | P2.1. பொருளாதாரப் பாதுகாப்பை அறிக்கையிடும் பெண்களின் விகிதம் | பொருளாதார பாதுகாப்பு என்பது அடிப்படை தேவைகள் மற்றும் நிலையான வருமானம் அல்லது சேமிப்புக்கான அணுகல் என வரையறுக்கப்படுகிறது. இந்த குறிகாட்டி குடித்தொகை மட்டத்தில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட மட்டத்தில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். பொருளாதார பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் ஆகியவற்றை அளவிடுவதற்கான கருவிகளின் தொகுப்பை அப்துல் லத்தீ்.ப் ஜமீல் வறுமை செயற்பாட்டு ஆய்வக (J-PAL) ஆவணமான, தாக்க மதிப்பீடுகளில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வலுவூட்டலை அளவிடுவதற்கான செயன்முறை வழிகாட்டியில் காணலாம். பெண்களின் பொருளாதார வலுவூட்டலை அளவிடுவதற்கான மேலதிக வழிகாட்டுதல்களை பெண்களின் பொருளாதார வலுவூட்டுதல்: வரைபட இணையதளத்திலும் காணலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | P3. பெண்கள் அதிகரித்த நிதியியல் சுதந்திரத்தை கொண்டிருக்கிறார்கள் | P3.1. அதிகரித்த நிதியியல் சுதந்திரத்தை அறிக்கையிடும் பெண்களின் விகிதம் | E3.1 இற்கான வழிகாட்டுதலை இங்கே பார்வையிடுக |
| **E** **சூழல்கள் பாதுகாப்பானதாக மாற்றப்பட்டன** | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது<br>VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | EN1. பாடசாலைகள், பணியிடங்கள், பிற நிறுவனங்கள் மற்றும் பொது இடங்கள் பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பாதுகாப்பானவை | EN1.1. பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட பாடசாலைகள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களை பாதுகாப்பானதாக உணரும் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | இந்த குறிகாட்டி பாடசாலைகள் மற்றும் பிற கல்வி அமைப்புகள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்கள் உட்பட பல சூழல்களில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பான உணர்வுகளை அளவிடுகிறது. பாதுகாப்பாக உணர்வது என்பது வன்முறை, துன்புறுத்தல் அல்லது சுரண்டல் போன்றவற்றை அனுபவிக்கும் அபாயத்தை உணராமல் இருப்பதைக் குறிக்கிறது. இந்த குறிகாட்டிக்கான அளவீடுகள் அமைப்பைப் பொறுத்து மாறுபடும்.<br>உலகளாவிய பாடசாலை அடிப்படையிலான மாணவர் சுகாதாரக் கணக்கெடுப்பு (GSHS) பாடசாலையில் மற்றும் பாடசாலைக்கு செல்லும் வழியில் பாதுகாப்பு குறித்த மாணவர்களின் உணர்வை அளவிடும் அளவீடுகளைக் கொண்டுள்ளது. வீடு, சமூகம் மற்றும் பாடசாலை உட்பட பல்வேறு அமைப்புகளில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் உணர்வுகள் மற்றும் பாதுகாப்பு மற்றும் வன்முறையின் அனுபவங்களை அளவிடும் ஒரு விரிவான கருவிகளை VACS கொண்டுள்ளது. |
| | | EN2. சமூகங்களும் நிறுவனங்களும் பால்நிலை சமத்துவத்தை ஒரு விழுமியமாக நம்பி நிலைநிறுத்துவதுடன் VAW/VAC இனை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை | EN2.1. ஒரு கணவன் (ஆண்) தனது மனைவியை (பங்காளரை) குறைந்தபட்சம் ஒரு சூழ்நிலையில் அடிப்பது நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்ளும் நபர்களின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. | இங்கே குறிகாட்டி R3.1 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த EN மூலோபாயத்தில் “மக்கள்” என்பது சமுதாய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சக பணியாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது |
| | | | EN2.2. பால்நிலை சமத்துவ மனப்பாங்கு கொண்டவர்களின் விகிதம் | இங்கே குறிகாட்டி R3.2 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த EN மூலோபாயத்தில் “மக்கள்” என்பது சமுதாய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சக பணியாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது. |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | | EN2.3. பாலின சமத்துவம் குறித்த பிரத்தியேக உள்ளக கொள்கையை நிறுவனம் கொண்டுள்ளது | குறிகாட்டி S2.3 இற்கான வழிகாட்டுதலை இங்கே பார்க்கவும் |
| | | | EN2.4. உள்ளக VAW முறைப்பாடுகளைக் கையாள நிறுவனம் ஒரு பிரத்தியேக நடைமுறையைக் கொண்டுள்ளது | குறிகாட்டி S2.4 இற்கான வழிகாட்டுதலை இங்கே பார்க்கவும் |
| | | EN3. பெண்கள் தங்கள் சமூகங்களுக்குள்ளும் அதற்கு அப்பாலும் அதிகரித்த சுயாட்சியான நடமாட்டத்தை கொண்டிருக்கிறார்கள் | EN3.1. கடந்த மாதத்தில் பெண்கள் அ) தங்கள் சமுதாயத்திற்குள் எங்காவது செல்ல ஆ) அவர்களின் சமுதாயத்திற்கு வெளியே எங்காவது செல்ல தங்கள் வீட்டை விட்டு வெளியேறிய தடவைகளின் சராசரி எண்ணிக்கை | பெண்களின் அதிகரித்த நடமாட்டம் வலுவூட்டலின் அதிகரிப்பைக் குறிக்கலாம், ஆனால் பெண்கள் தங்கள் சூழலை அணுகுவதற்கு நம்பிக்கையுடனும் பாதுகாப்பாகவும் உணர்கிறார்கள் என்பதையும் இது குறிக்கலாம். இந்த குறிகாட்டியானது கடந்த மாதத்தில் பெண்களின் சமுதாயத்திற்கு உள்ளேயும் வெளியேயுமான அவர்களின் நடமாட்டத்தை அளவிடுகிறது. பெண்கள் பொது இடங்களுக்குள் செல்லும்போது பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்வதற்காக இது EN1.1 குறிகாட்டியுடன் இணைத்து பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். கடந்த மாதத்தில் எத்தனை முறை பெண்கள் தங்கள் சமுதாயத்தை விட்டு வெளியேறினர், மற்றும் நடமாட்டம் தனியானதாக இருந்ததா அல்லது மற்றவர்களுடன் இணைந்ததாக இருந்ததா என்பன உட்பட மேலதிக வினாக்களைக் கேட்கலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| **C** சிறுவர் மற்றும் இளம் பருவத்தினர் துஸ்பிரயோகம் தடுக்கப்பட்டது | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது<br>VAC குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | C1. பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் நேர்மறையான பெற்றோருக்குரிய நடைமுறைகளை வலுப்படுத்துவதுடன், மிகவும் செழிப்பான, ஆதரவான பெற்றோர்-குழந்தை உறவுகளை உருவாக்குகிறார்கள் | C1.1. 1 பால்நிலை மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட, கடந்த மாதத்தில் ஒரு பராமரிப்பாளரால் வன்முறையற்ற வகையில் ஒழுக்க முறைகளை அனுபவித்த -17 வயதுடைய பெண்கள் மற்றும் சிறுவர்களின் விகிதம் | இந்த விளைவு அறிக்கை SDG குறிகாட்டி 16.2.1 மற்றும் INSPIRE இன் விளைவு 6 உடன் இணைக்கப்படுகிறது, இதில் மூன்று விடயங்கள் உள்ளன: பராமரிப்பாளர்களால் நேர்மறை ஒழுக்கம், நேர்மறையான பெற்றோர்-குழந்தை உறவுகள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலர் மேற்பார்வை ஆகியவையாகும். இந்த குறிகாட்டி குடித்தொகை அளவில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட அளவில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். இந்த குறிகாட்டிக்கான சாத்தியமான கருவிகள் தொடர்பான MICS இலிருந்து உட்பட மாதிரி கேள்விகள் உள்ளடங்கிய மேலதிக வழிகாட்டுதலை INSPIRE குறிகாட்டி வழிகாட்டுதல் மற்றும் முடிவுகள் கட்டமைப்பில் காணலாம். |
| | | C2. குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் நிறுவனங்கள் பால்நிலை சமத்துவத்தை ஒரு விழுமியமாக நம்பி நிலைநிறுத்துவதுடன் VAW/VAC இனை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை | C2.1. ஒரு கணவன் (ஆண்) தனது மனைவியை (பங்காளரை) குறைந்தபட்சம் ஒரு சூழ்நிலையில் அடிப்பது நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்ளும் நபர்களின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. | இங்கே குறிகாட்டி R3.1 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த C மூலோபாயத்தில் "மக்கள்" என்பது சமுதாய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சக பணியாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது. |
| | | | C2.2. பால்நிலை சமத்துவமான மனப்பாங்கை கொண்டவர்களின் விகிதம் | இங்கே குறிகாட்டி R3.2 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த C மூலோபாயத்தில் "மக்கள்" என்பது சமுதாய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், சக பணியாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது. |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | | C2.3. பாடசாலை பால்நிலை சமத்துவம் குறித்த பிரத்தியேகமான உள்ளக கொள்கையை கொண்டுள்ளது | குறிகாட்டி S2.3 இற்கான வழிகாட்டுதலை இங்கே பார்க்கவும் |
| | | | C2.4. உள்ளக VAW முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு பாடசாலைக்கு ஒரு பிரத்தியேகமான நடைமுறை உள்ளது | குறிகாட்டி S2.4 இற்கான வழிகாட்டுதலை இங்கே பார்க்கவும் |
| | | C3. பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன | C3.1. பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதாகப் அறிக்கையிடும் பாலினத்தால் பிரிக்கப்பட்ட பெற்றோரின் விகிதம் | பெற்றோர் பெண் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கான சமமான வாய்ப்புகளை வழங்குவது, கல்வி அல்லது பாதுகாப்பு, நியாயமான ஊதியம் பெறும் வேலை, வயது வந்த ஒருவராக திருமணத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, வீட்டுப் பொறுப்புகளைப் பகிர்வதில் பால்நிலை சமத்துவம் மற்றும் நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம். நடவடிக்கைகள் எதிர்கொள்ள எதிர்பார்க்கும் வாய்ப்புகளின் வகைகள் உட்பட இந்தக் குறிகாட்டியின் அளவீடு உள்ளூர் மற்றும் நிகழ்ச்சித் திட்ட அமைப்புகளுக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். |
| | | C4. பால்நிலை சமத்துவம் மற்றும் மரியாதையளிப்பு என்பன பாடசாலைகள், கற்றல் மற்றும் சகாக்களின் சூழல்களில் நடைமுறையில் உள்ளன | C4.1. பால்நிலை சமத்துவம் மற்றும் மரியாதைக்குரிய உறவுகளை வெளிப்படுத்தும் பாடசாலைகள், கற்றல் மற்றும் சகாக்களின் சூழல்களின் எண்ணிக்கை | இந்த விளைவுக்கான குறிகாட்டிகள் நிகழ்ச்சித் திட்ட சூழல் மற்றும் இலக்கு குழுக்களின் பிரகாரம் இன்னும் குறிப்பானதாக இருக்க வேண்டும். உதாரணமாக, பால்நிலை சமத்துவத்தை வெளிப்படுத்தும் பாடசாலை மற்றும் கற்றல் சூழல்கள் வகுப்பறையில் ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்தும் ஆசிரியர்களை உள்ளடக்கியிருக்கலாம். மரியாதைக்குரிய உறவுகளை வெளிப்படுத்துவது மதிப்பு, மரியாதை மற்றும் மற்றவர்களின் உரிமைகளுக்கான மரியாதை ஆகியவற்றை வடிவமைத்தலை உள்ளடக்கும். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | C5. பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள் பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பானவை | C5.1. பாடசாலை மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வதாக அறிக்கையிடும் பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகளின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது | இந்த குறிகாட்டி INSPIRE விளைவு குறிகாட்டி 9.2 உடன் இணைக்கப்படுகிறது, இது பாடசாலையில் அல்லது பாடசாலைக்குச் செல்லும் வழியில் சிறுவர்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதுடன், பொது இடங்கள் உட்பட பிற இடங்களில் சிறுவர்களின் பாதுகாப்பை உள்ளடக்கியதாக விரிவுபடுத்துகிறது. இந்த குறிகாட்டி குடித்தொகை மட்டத்தில் (உதா. புவியியல் பரம்பல் பகுதியில்) அல்லது நிகழ்ச்சித் திட்ட மட்டத்தில் (உதா. நேரடியான நிகழ்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு) அளவிடப்படலாம். உலகளாவிய பாடசாலை அடிப்படையிலான மாணவர் சுகாதாரக் கணக்கெடுப்பு (GSHS) பாடசாலையில் மற்றும் பாடசாலைக்குச் செல்லும் வழியில் பாதுகாப்பு குறித்த மாணவர்களின் உணர்வை அளவிடும் அளவீடுகளைக் கொண்டுள்ளது. வீடு, சமூகம் மற்றும் பாடசாலை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் சிறுவர்களின் பாதுகாப்பைப் பற்றிய உணர்வை அளவிடும் ஒரு விரிவான விடயங்களையும் VACS கொண்டுள்ளது. |
| | | C6. கல்வியாளர்கள் நேர்மறையான, அகிம்சை முறையிலான ஒழுக்கத்தின் வடிவங்களைப் பயன்படுத்துகின்றனர் | C6.1. கடந்த மூன்று சந்தர்ப்பங்களில் மாற்று, வன்முறையற்ற ஒழுங்குமுறைகளைப் பயன்படுத்தி அறிக்கை செய்யும் கல்வியாளர்களின் விகிதம் | கல்வியாளர்களில், பாடசாலைகள் அல்லது இளைஞர் கழகங்கள், சமூக மையங்கள் அல்லது சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கற்றலில் பங்கேற்கும் (அவர்கள் பாடசாலையில் சேர்ந்திருந்தாலும் அல்லது பாடசாலைக்கு வெளியே இருந்தாலும்) மற்றைய கற்றல் சூழல்களில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விசார் ஊழியர்களை உள்ளடக்கியிருக்கலாம். அகிம்சைரீதியான ஒழுக்கத்தின் வடிவங்களில் உடலியல் மற்றும் உணர்ச்சி வன்முறை உட்பட உடல் ரீதியான தண்டனையை நிராகரிப்பது மற்றும் அதிகளவான வீட்டுப்பாடம் அல்லது பிற கல்விப் பணிகளை ஒதுக்குவது, வகுப்பில்/குழுவிடம் மன்னிப்பு கேட்கும்படி சிறுவனிடம் கூறுவது அல்லது குழந்தையின் மோசமான நடத்தை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பெற்றோரை வரச் சொல்வது போன்ற மாற்று ஒழுங்குமுறை முறைகளைத் தழுவுவது ஆகியவை அடங்கும். வன்முறை மற்றும் வன்முறையற்ற ஒழுக்க முறைகளின் பல தேர்வு விருப்பங்களுடன், கடந்த மூன்று சந்தர்ப்பங்களில் அவர்கள் எந்த முறைகளைப் பயன்படுத்தினார்கள் என்பதைக் குறிப்பிடும்படி கல்வியாளர்களைக் கேட்பதன் மூலம் இக் குறிகாட்டியை அளவிட முடியும். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| **T**<br>உருமாற்றப்பட்ட மனப்பாங்குகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள் | VAW குறைக்கப்பட்டது அல்லது நீக்கப்பட்டது | T1. குடும்பங்களும் சமூகங்களும் நிறுவனங்களும் பால்நிலை சமத்துவத்தை ஒரு விழுமியமாக நம்பி நிலைநிறுத்துவதுடன் VAW இனை இனிமேல் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை | T1.1. ஒரு கணவன் (ஆண்) தனது மனைவியை (பங்காளரை) குறைந்தபட்சம் ஒரு சூழ்நிலையில் அடிப்பது நியாயமானது என்பதை ஏற்றுக் கொள்ளும் நபர்களின் விகிதம், பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. | இங்கே குறிகாட்டி R3.1 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த T மூலோபாயத்தில் "மக்கள்" என்பது குடும்ப உறுப்பினர்கள், சமுதாய உறுப்பினர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது. |
| | | | T1.2. பால்நிலை சமத்துவமான மனப்பாங்கை கொண்டவர்களின் விகிதம் | இங்கே குறிகாட்டி R3.2 இற்கான வழிகாட்டுதலை பார்க்கவும் - இந்த T மூலோபாயத்தில் "மக்கள்" என்பது குடும்ப உறுப்பினர்கள், சமுதாய உறுப்பினர்கள் மற்றும் பணி முன்னெடுப்பாளர்களை குறிக்கின்றது. |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | | T1.3. ஒரு பெண்ணோ ஆணோ ஒரு விதமாக செயற்படின், சமூகத்தில் உள்ள மற்றவர்கள் அவ்விதமாகவே செயற்படுவார்கள் என்று நம்புபவர்களின் விகிதம் | சமூக விழுமியங்கள் என்பது ஒரு குடித்தொகை அல்லது குழுவால் பகிரப்படும் நடத்தை விதிகள் மற்றும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் மற்றும் ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பது பற்றிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளது. சமூக விழுமியங்களைப் புரிந்துகொள்வதற்கு, குறிப்பிட்ட சமூக விழுமியங்கள் என்ன, அந்த விழுமியங்களுக்கான கட்டுப்பாட்டுக் குழுக்கள் யார், தனிநபர்கள் தங்கள் நடத்தையை மாற்றுவதைத் தடுக்கும் (நேர்மறை அல்லது எதிர்மறை) சமூகத் தடைகள் என்ன, மற்றும் நடத்தை விதிகளில் ஏதாவது விதிவிலக்குகள் உள்ளதா (உதா. ஒரு விழுமியத்தை மீறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை) என்பவை தொடர்பான பகுப்பாய்வு அணுகுமுறை தேவைப்படுகிறது. அத்தகைய பகுப்பாய்வை நடாத்துவதற்கு, சமூக விழுமியத்தின் வெவ்வேறு கூறுகளை (அதாவது கட்டுப்பாட்டுக் குழுக்கள், தடைகள், விதிவிலக்குகள்) அளவிட வேண்டியதுடன், இதற்கு பல குறிகாட்டிகள் தேவைப்படும்.<br><br>சமூகத் தடைகளை அளவிடுவதற்கும், ஒரு குறிப்பிட்ட நடத்தைக்கு சமூகத்தில் உள்ள மற்றவர்கள் எவ்வாறு எதிர்வினையாற்றுவார்கள் என்பதற்கும் இந்த குறிகாட்டி ஒரு உதாரணமாகும். நடத்தைகள் மற்றும் எதிர்வினைகள் (X) நிகழ்ச்சித் திட்ட சூழல் மற்றும் விரும்பிய மாற்றத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட வேண்டும். உதாரணமாக, VAW என்பது மற்றவர்கள் தலையிடக் கூடாத ஒரு தனிப்பட்ட குடும்ப விடயமாக இருக்கும் விழுமியத்தை மாற்றுவதே ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் என்றால், பொருத்தமான குறிகாட்டி ஒரு மனிதன் IPV இனை மேற்கொண்டால், சமூகத்தில் உள்ள மற்றவர்கள் தலையிடுவார்கள் என்று நம்பும் நபர்களின் விகிதம் என்பதாக இருக்கலாம்.<br><br>CARE இன் சமூக விழுமியங்கள் பகுப்பாய்வு நிகழ்ச்சித் திட்டம் (SNAP), மற்றும் கற்றல் கூட்டுறவின் சமூக விழுமியங்கள் ஆய்வுக் கருவி (SNET) உட்பட சமூக விழுமியங்களை பகுப்பாய்வு செய்யப் பயன்படுத்தக்கூடிய பல கருவிகள் உள்ளன. இவை மற்றும் சமூக விழுமியங்களை அளவிடுவதற்கான பிற ஆதாரங்களை பால்நிலை விழுமியங்கள் மீதான மேம்பட்ட கற்றல் மற்றும் புத்தாக்கம் (ALIGN) இணையதளத்தில் காணலாம். |

| மூலோபாயம் | தாக்கம் | விளைவுகள் | குறிகாட்டிகள் | வழிகாட்டல் |
|---|---|---|---|---|
| | | T2. பால்நிலை சமத்துவமும் மரியாதை அளிப்பும் நெருங்கிய, குடும்ப மற்றும் சமுதாய உறவுகளில் நடைமுறைப்படுத்தப்படு-கின்றன | T2.1. வீட்டுக்கான தீர்மானம் மேற்கொள்ளலில் (தனியாகவோ அல்லது கூட்டாகவோ) பங்கேற்கும் 15-49 வயதுக்குட்பட்ட தற்போது பங்காளராக உள்ள பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் விகிதம் | தாக்க குறிகாட்டி R1.1 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | | T2.2. வீட்டுப் வகிபாகங்களில் பால்நிலை சமத்துமான பிரிப்பை பின்பற்றியதாக அறிக்கையிட்ட பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் | தாக்க குறிகாட்டி R1.2 இற்கான வழிகாட்டியை பார்க்கவும் |
| | | | T2.3. பிற சமுதாய உறுப்பினர்கள் முக்கியமான விடயங்களில் தங்களின் அபிப்பிராயங்களை கேட்கிறார்கள் என்று சொல்லும் பெண்களின் விகிதம் | இந்த குறிகாட்டி சமூக தீர்மானம் மேற்கொள்ளலில் பெண்களின் பங்களிப்பை அளவிடுவதுடன், பெண்களுக்கான மதிப்பு, அவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் சமூக விடயங்களில் அவர்களின் பங்களிப்பு ஆகியவற்றைச் சுற்றியுள்ள சமூக விழுமியங்களில் ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறது.<br>கணக்கெடுப்பு கேள்வி, சமுதாய உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை கேட்டிருக்கிறார்களா எனக் கேட்பதுடன், எந்தெந்த கருத்துக்கள் கேட்கப்பட்டன / என்ன விடயங்கள் தொடர்பில் என்பது பற்றிய பின்தொடர்தல் கேள்விகளையும் பெண்களிடம் கேட்கலாம் |

# இறுதிக்குறிப்புகள்

[1] ஆதாரங்களில் பின்வருவன அடங்கும்: Programming Essentials, Monitoring & Evaluation. UNWOMEN Virtual Knowledge Centre to End Violence against Women and Girls; DFID (2012) How to Note: Guidance on Monitoring and Evaluation for Programming on Violence against Women and Girls. CHASE Guidance Note Series; Programming Essentials, Monitoring & Evaluation; USAID (2014) Toolkit for Monitoring and Evaluating Gender-Based Violence Interventions Along the Relief to Development Continuum. United States Agency for International Development.

[2] Programming Essentials, Monitoring & Evaluation. UNWOMEN Virtual Knowledge Centre to End Violence against Women and Girls; Ellsberg, M. & Heise, L. (2005) Researching Violence Against Women: A Practical Guide for Researchers and Activists. World Health Organization, PATH; Global Women's Institute (2019) Participatory Monitoring and Evaluation (M&E) of Gender Based Violence Programs. SVRI Pre-Conference Workshop October 2019, The Global Women's Institute, The George Washington University; DFID (2012) How to Note: Guidance on Monitoring and Evaluation for Programming on Violence against Women and Girls. CHASE Guidance Note Series.

[3] மேலதிக வழிகாட்டுதலுக்கு பார்க்கவும்: Global Women's Institute (2019) Participatory Monitoring and Evaluation (M&E) of Gender Based Violence Programs. SVRI Pre-Conference Workshop October 2019, The Global Women's Institute, George Washington University.

[4] García-Moreno, C., Jansen, HAFM., Ellsberg, M., Heise, L. & Watts, C. (2005) WHO multi-country study on women's health and domestic violence against women: initial results on prevalence, health outcomes and women's responses. Geneva: World Health Organization.

[5] https://dhsprogram.com/pubs/pdf/DHSQMP/DHS6_Module_Domestic_Violence_6Aug2014_DHSQMP.pdf

[6] https://mics.unicef.org/

[7] https://promundoglobal.org/programs/international-men-and-gender-equality-survey-images/

[8] Fulu, E., Jewkes, R., Roselli, T., García-Moreno, C. (2013) Prevalence of and factors associated with male perpetration of intimate partner violence: findings from the UN Multi-country Cross-sectional Study on Men and Violence in Asia and the Pacific. Lancet Global Health, 1(4): e208-e218.

[9] https://www.cdc.gov/violenceprevention/childabuseandneglect/vacs/index.html

[10] இயலாமை நிலைமை பெரும்பாலும் குடித்தொகை கணக்கெடுப்புகளில் பயன்படுத்தக்கூடிய செயற்பாட்டு இயலாமையை அளவிடும் ஆறு கேள்விகளின் தொகுப்பான Washington Group Short Set of Disability பயன்படுத்தி அளவிடப்படுகிறது. குறுகிய கேள்விகளின் பயன்பாட்டில் செயற்பாட்டில் உள்ள அனைத்து வகையான சிரமங்களையும் உள்ளடக்காமை போன்ற சில மட்டுப்பாடுகள் உள்ளன. இயலாமை பற்றிய விரிவான தரவு தேவைப்பட்டால், Washington Group Extended Set on Functioning (WG ES-F) பயன்படுத்த முடியும். UNICEF உடன் இணைந்து வாசிங்டன் குழுமம், 2-17 வயதுடைய சிறுவர்களுடன் பயன்படுத்துவதற்காக, Child Functioning Question Set உருவாக்கியுள்ளது.

[11] பால்நிலை மனப்பான்மையை அளவிடுவதற்கு பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. IMAGES உட்பட பல கணக்கெடுப்புகள், Gender Equitable Mens (GEM) Scale எடுக்கப்பட்டது. Gender Equity Scale பல்வேறு அமைப்புகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மனைவி உணவை தவிர்ப்பது, கணவனுடன் வாக்குவாதம் செய்தல், கணவனிடம் சொல்லாமல் வெளியே செல்லுதல், குழந்தைகளை புறக்கணிப்பது மற்றும் கணவனுடன் உடலுறவு கொள்ள மறுப்பது உட்பட ஐந்து வெவ்வேறு சூழ்நிலைகளில் மனைவியை அடிப்பதை ஏற்றுக்கொள்ளும் அல்லது நியாயப்படுத்துவதை DHS அளவிடுகிறது. இந்த DHS கருவியானது அமைப்பிற்கான மேலதிக சூழ்நிலைகளை உதாரணமாக, ஒரு மனைவி தன் கணவனுக்கு துரோகம் செய்தல் போன்றவற்றை அளவிட பல்வேறு ஆய்வுகளில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

[12] உதாரணமாக, DHS Domestic Violence Module, வன்முறையை அனுபவித்த பிறகு யாரிடம் உதவி கோரினார்கள் என்பது உட்பட தப்பிப் பிழைத்தவர்களின் உதவி தேடும் நடத்தைகளை அளவிடும் ஆய்வுக் கேள்விகளைக் கொண்டுள்ளதுடன், இந்தக் கேள்விகள் கலாச்சார சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படலாம்.

[13] குறைந்த மற்றும் நடுத்தர-வருமானமுள்ள நாடுகளில் VAW ஆய்வுகள் உட்பட, மது அருந்துதல், துஸ்பிரயோகம் மற்றும் தங்கியிருக்கும் நிலை ஆகியவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கருவி, Alcohol Use Disorders Identification Test (AUDIT) ஆகும்.

[14] விரக்தி மற்றும் பிந்தைய மனஉளைச்சல் சீர்கேடு உட்பட உளச்சோர்வு அல்லது பிற வகையான உளநோய்களின் அறிகுறிகளை அளவிடுவதற்குப் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. பல அமைப்புகளில் பயன்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்ட பெரியவர்களிடையே மனச்சோர்வின் அறிகுறிகளை அளவிடுவதற்கான பொதுவான அளவுகோல், திருத்தப்பட்ட Center for Epidemiologic Studies Depression Scale (CESD- R) ஆகும். குழந்தைகளுக்கு, பொதுவாகப் உளச்சோர்வின் அறிகுறிகளை அளவிட பொதுவாக பயன்படும் அளவீடுகளில், இளம் பருவத்தினருக்கு நம்பகமானதாகக் கண்டறியப்பட்டுள்ள, ஆனால் இளைய குழந்தைகளுக்கு அல்லாத குழந்தைகளுக்கான Center for Epidemiologic Studies Depression Scale for Children (CES-DC) மற்றும் Children's Depression Inventory இரண்டாவது பதிப்பு (CDI-2) ஆகியவையாகும்.

[15] வன்முறை நிகழ்த்தப்படுவதை அளவிடுவதற்குப் பல்வேறு வகையான கருவிகள் பயன்படுத்தப்படுவதுடன், இவை பொதுவாக வன்முறை அனுபவத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகளிலிருந்து தழுவப்பட்டதுடன், தன்வினையில் கேள்வியமைப்புகளை கொண்டிருக்கின்றன. உதாரணமாக, UN MCS ஆனது, IPV மற்றும் NPSV இன் குற்றத்தை அளவிடுவதற்காக நெருங்கிய பங்காளர் வன்முறை (IPV) மற்றும் பங்காளர் அல்லாத பாலியல் வன்முறை (NPSV) ஆகியவற்றின் அனுபவம் குறித்த WHO MCS கேள்விகளின் தொகுப்பை பின்பற்றுகின்றது. இந்தத் தழுவிய கேள்விகளின் தொகுப்பு, பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுக்க என்ன வேலை செய்கிறது என்பது உட்பட பிற ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டது.

[16] MICS Child Discipline Module பெற்றோர்-குழந்தை மோதல் தந்திரோபாய அளவுகோலில் இருந்து தழுவப்பட்டதுடன், குழந்தைகளின் பெற்றோரின் ஒழுக்கம் தொடர்பான நடைமுறைகள் மற்றும் அணுகுமுறைகள் குறித்து பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களிடம் கேட்கப்படும் கேள்விகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் உடல் தண்டனை அனுபவங்கள் குறித்த கேள்விகளின் தொகுப்பையும் VACS கொண்டுள்ளதுடன், இது பராமரிப்பாளர்களிடம் கேட்பதை விட நம்பகரமான நடவடிக்கையாக இருக்கலாம்.

[17] VAW இனால் தப்பிப் பிழைத்தவர்களுக்கான மனப்பாங்குகளை அளவிடும் கருவிகள், கற்பழிப்பு புனைகதைகள் மற்றும் IPV இனுடைய பெண்களின் சகிப்புத்தன்மை பற்றிய எதிர்பார்ப்புகள் உட்பட பல்வேறு வகையான மனப்பாங்குகளை அளவிட முடியும். உதாரணமாக, Illinois Rape Myth Acceptance Scale சுருக்கமான வடிவம் வன்முறையில் இருந்து தப்பிப் பிழைத்தர்களுடன் தொடர்புடைய கற்பழிப்பு புனைகதைகளுடனான பதிலளித்தவர்களின் உடன்பாட்டை அளவிடுவதற்கு பல்வேறு கலாச்சார அமைப்புகளில் பயன்படுத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

[18] தனிப்பட்ட பால்நிலை மனப்பான்மை மற்றும் VAW தொடர்பான மனப்பான்மைகளை அளவிடுவது VAW M&E இனுடைய ஒரு முக்கிய அங்கமாக இருந்தாலும், சில நடவடிக்கைகள் சமூக விழுமியங்களைப் புரிந்துகொள்வதற்காக சமூகத்தில் உள்ள மற்றவர்களின் அணுகுமுறைகளைப் பற்றிய கருத்துக்களை அளவிடுவதில் ஆர்வமாக இருக்கலாம். இது பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக, What Works to Prevent Violence Against Women and Girls Global Programme, GEM அளவுகோல் அல்லது பால்நிலை சமத்துவ அளவுகோல் போன்ற கருவிகளில் இருந்து எடுக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் பால்நிலை சமத்துவம் மற்றும் VAW பற்றி சமூகம் என்ன நினைக்கிறது என்பதைப் பற்றிய கருத்துக்களை அளவிடுவதற்கு தழுவப்பட்ட கேள்விகள் போன்றன. VAW நடவடிக்கைகள் சமூக விழுமியங்களை மாற்றுவதில் குறிப்பாக கவனம் செலுத்தினால், சமூக விழுமியங்கள் மற்றும் தடைகள் அல்லது நெறிமுறைகளை நிராகரிப்பது அல்லது உறுதிப்படுத்துவது போன்றவற்றிற்கான முக்கியமான கட்டுப்பாட்டுக் குழுக்கள் உட்பட, தனிப்பட்ட மனப்பாங்குகள் மற்றும் சமூக மனப்பான்மையின் உணர்வுகள் பற்றிய விரிவான தரவுகளை சேகரிப்பது அவசியமாக இருக்கலாம். சமூக நெறிமுறைகளை அளவிடுவதற்கான பல்வேறு கிடைக்கக்கூடிய கருவிகள் பற்றிய வழிகாட்டுதலுக்கு, Samman, E. (2019) Quantitative measurement of gendered social norms பார்க்கவும். பால்நிலை விழுமியங்களில் கற்றல் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துதல் (ALIGN).

[19] உதாரணத்திற்கு பார்க்கவும்: Stern, E., Heise, L. & McLean, L. (2018) The doing and undoing of male household decision-making and economic authority in Rwanda and its implications for gender transformative programming. Culture, Health and Sexuality 20(19); Ellsberg, M. & Heise, L. (2005) Researching Violence Against Women: A Practical Guide for Researchers and Activists. World Health Organization, PATH.

[20] https://www.who.int/immunization/hpv/deliver/nine_steps_for_developing_a_scalingup_strategy_who_2010.pdf

[21] Goldmann, L., Lundgren, R., Welbourn, A. et al. (2019) On the CUSP: the politics and prospects of scaling social norms change programming. Sexual and Reproductive Health Matters, 27(2): 51-63.

[22] குறிப்பிட்ட வகை மக்கள் அல்லது பங்கேற்பாளர்களுடன் ஆராய்ச்சி மற்றும் M&E செயற்பாடுகளை வடிவமைத்து அமுலாக்கும் போது, WHO இன் எட்டு கொள்கைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மேலதிகமான நெறிமுறை மற்றும் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். உதாரணமாக, வன்முறையில் ஈடுபடுபவர்களுடன் ஆராய்ச்சியில் ஈடுபடுவது, அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் சரி, கவனிக்கப்பட வேண்டிய மற்றும் திட்டமிடப்பட வேண்டிய குறிப்பான அபாயங்களை எழுப்புகிறது. உதாரணமாக, Jewkes, R., Dartnall, E. & Sikweyiya, Y. (2012). Ethical and Safety Recommendations for Research on the Perpetration of Sexual Violence. Sexual Violence Research Initiative. Pretoria, South Africa, Medical Research Council.

[23] WHO (2001) Putting Women First: Ethical and Safety Recommendations for Research on Domestic Violence Against Women. Geneva: World Health Organization; WHO (2016) Ethical and safety recommendations for intervention research on violence against women. Building on lessons from the WHO publication Putting women first: ethical and safety recommendations for research on domestic violence against women. Geneva: World Health Organization.

[24] இந்த வழிகாட்டுதல் பெரும்பாலும் UNICEF இன் (2018) INSPIRE Indicator Guidance and Results Framework ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டதுடன், இதில் சிறுவர்களுடன் M&E இனை மேற்கொள்ளும் போதான நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அத்தியாயம் உள்ளது.

[25] இந்த பிரச்சினையில் ஒருமித்த கருத்து இல்லை. சில சிறுவர் உரிமை பரப்புரையாளர்கள், பெற்றோரின் அனுமதியின்றி பங்கேற்பதற்கு சிறுவர்களை அனுமதிப்பது பாதுகாப்பானது மற்றும் மரியாதைக்குரியது என்று வாதிடுகின்றனர். பெற்றோரின் அனுமதியின்றி குழந்தைகளை நேர்காணல் செய்யக்கூடிய குறிப்பிட்ட சூழ்நிலைகள் உள்ளதா என்பதை ஆராய்ச்சியாளர்களும் நிகழ்ச்சித் திட்ட பணியாளர்களும் பரிசீலித்து மதிப்பீடு செய்ய வேண்டும். உதாரணமாக, சிறுவர்கள் திருமணமாகி இருக்கும் சந்தர்ப்பங்களில், அல்லது பிரிந்த/தெரு குழந்தைகள், குழந்தை பாலியல் தொழிலாளர்கள் அல்லது பெற்றோர்கள் ஆராய்ச்சியைப் பற்றி அறிந்தால் துஷ்பிரயோகம் ஆபத்தை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் இது நிகழலாம்.

[26] Gibbs, A., Dunkle, K. & Jewkes, R. (2018) Emotional and economic intimate partner violence as key drivers of depression and suicidal ideation: A cross-sectional study among young women in informal settlements in South Africa. PLOS ONE, https://doi.org/10.1371/journal.pone.0194885.

[27] Jewkes, R., Nduna, M., Levin J., Jama, N., Dunkle, K., Khuzwayo, N. et al. (2006) A cluster randomized-controlled trial to determine the effectiveness of Stepping Stones in preventing HIV infections and promoting safer sexual behaviour amongst youth in the rural Eastern Cape, South Africa: trial design, methods and baseline findings. Trop Med Int Health. 2006;11 (1):3–16.

[28] Donald, A., Koolwal, G., Annan, J., Falb, K. & Goldstein, M. (2020) Measuring women's agency. Feminist Economics, https://doi.org/10.1080/13545701.2019.1683757.

**© UN Women 2020**

**இந்த ஆவணம் ஐ.நா. பெண்கள் அமைப்பால் உத்தரவளிக்கப்பட்டதுடன் Social Development Direct இனால் உருவாக்கப்பட்டதுமான RESPECT கட்டமைப்பை செயல்படுத்துவதற்கான வழிகாட்டியின் ஒரு பகுதியாகும், அதை இங்கே காணலாம்.**

**Suggested citation:** UN Women and Social Development Direct (2020) Preventing Violence Against Children and Adolescents, RESPECT: Preventing Violence against Women Strategy Summary.